உ

கணபதி துணை.

# ஸ்ரீ தியாகேசர் பிரபந்தங்கள்

1. தியாகேசர் குறவஞ்சி
2. திருவாரூர் மருந்து வெண்பாமாலை
3. தியாகேசர் தாலாட்டு

பதிப்பாசிரியர்:

S. கலியாணசுந்தரையர்.

உ
கணபதி துணை

# ஸ்ரீ தியாகேசர் பிரபந்தங்கள்

1. தியாகேசர் குறவஞ்சி
2. திருவாரூர் மருந்து வெண்பாமாலை
3 தியாகேசர் தாலாட்டு

இவை
குறிப்புரைகளுடன்
திருச்சிராப்பள்ளி, ஜில்லா விவசாய சங்கம், ஹோமியோபதி சங்கம், சைவபரிபாலனசங்கம் இவற்றின் தலைவரும் பிக்ஷாண்டார்கோவில் பண்ணையாருமான
ஸ்ரீமான் ராவ் பஹதூர் G. இராஜகோபால பிள்ளை, F.R.H.S. அவர்கள் விருப்பத்தின்படி

மஹாமஹோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் குமாரர்
S. கலியாணசுந்தரையரால்

சென்னை, கபீர் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பெற்றன
விய ஸு புரட்டாசி மீ
1946
[...ம பதிவு] [விலை ரூ. 1-0-0

முதற்பதிப்பு செப்டம்பர் 1946

## இப்புத்தகத்தில் அடங்கியவை


| | | பக்கம் |
|---|---|---|
| | முகவுரை ... | iii |
| 1. | தியாகேசர் குறவஞ்சியும் குறிப்புரையும் ... | 1 |
| 2. | திருவாரூர் மருந்துவெண்பா மாலேயும் குறிப்புரையும் ... | 43 |
| 3. | தியாகேசர் தாலாட்டு ... | 58 |
| 4. | திருவாரூர்த் தலச் செய்திகள் ... | 60 |


Printed at KABEER PRINTING WORKS, Triplicane, Madras
and Published by S. Kalyanasundara Iyer, Paper Issue Card No

# முகவுரை

**தேவாரம்**

உய்ய லுறுவீர்காள்
ஐய னாரூரைக்
கையி னாற்றொழ
நையும் வினை தானே.

இப்புத்தகத்தில் திருவாரூர்த் தியாகேசர் குறவஞ்சி, திருவாரூர் மருந்து வெண்பா மாலை, தியாகேசர் தாலாட்டு என்னும் மூன்று நூல்கள் அடங்கியுள்ளன.

## 1. தியாகேசர் குறவஞ்சி

குறவஞ்சியென்பது பிற்காலத்தே தமிழில் தோன்றிய பிரபந்த வகைகளுள் ஒன்று. இது நாடகத் தமிழைச் சார்ந்தது. குறத்தி தோன்றுதலும் அவள் குறி சொல்லுதலும் பிறவும் இப்பிரபந்தத்தின் பெரும்பகுதியாக அமைதலின் இப்பெயர் பெற்றது. பன்னிருபாட்டியலிற் குறத்தி பாட்டென்ற பிரபந்தத்தின் இலக்கணம் கூறப்படுகின்றது. அது குறத்தி குறி கூறுவதாக இயற்றப்படும் ஒருவகை நூலுக்கு உரியது. கலம்பகத்தின் உறுப்புக்களுள் குறம் என்பது ஒன்று. அதில் அமையும் பொருளும் குறத்தி குறி கூறுதலே.

குறவஞ்சி நூல்களில் முதலில் காப்பும் மங்களமும் கூறப்பெற்றபின் கட்டியக்காரன் வருதலும் பாட்டுடைத் தலைவன் பவனிவருதலை அவன் கூறுதலும் அமைக்கப்படும். தலைவன் பவனி வரும்போது தலைவி அவனைக்கண்டு காமுறுதலும் அவளுடைய வருணனையும் இயல்புகளும் பின்னர்க் கூறப்படும். தலைவியைப் பற்பல நூல்களில் பலவகைப் பெயர்களால் வழங்குவர். அவற்றுட் சில:—மதனவல்லி, வசந்தவல்லி, காமரசவல்லி, தெய்வமோகினி, மோகினி, இராசமோகினி, மதனரதி, மோகனவல்லி, மோகனாங்கி என்பன.

தலைவனைக் கண்டு காதல் கொண்ட தலைவி விரககவேதனை ...ன்மதனையும், சந்திரன், தென்றல், குயில் முதலியவற்றை

யும் நிந்தித்துப் புலம்பல் பின்பு வரும். அப்பால் தலைவியின் பாங்கி வருதலும் அவளைத் தலைவி தலைவன்பால் தூது போக்குதலும், அப்பொழுது குறத்தி தற்செயலாக வருதலும், தலைவி அவளை அழைப்பித்தலும், அவள் தலைவனுடைய வாசல்வளம் கூறுதலும் காணப்பெறும். அதன் பின்னர்க் குறத்தியைத் தலைவி வினவுதலும், அவளது தேசம், மலைவளம், சாதியியல்பு, நதிவளம் முதலியவற்றைக் கேட்டலும், குறத்தி அவற்றைக் கூறுதலும், தன் இனத்தார் வாழும் மலையின் பெருமை, வளம் முதலியவற்றைக் கூறுதலும் அமையப்பெறும். பின்பு, அதற்கு முன் குறி சொல்லியவர்களையும் அவர்களிடம் பெற்ற பரிசுகளையும் பற்றி வினவிய தலைவிக்குக் குறத்தி விடை பகர்வாள்.

அப்பால் தலைவி தன் கையைப் பார்த்துக் குறி சொல்லும்படி வேண்டுதலும், குறத்தி தெய்வ பூசைக்கு உரியவற்றை அமைக்கும்படி சொல்லித் தான் வழிபடும் தெய்வங்களைத் துணை செய்யுமாறு வேண்டிப் பின்பு குறிசொல்லத் தொடங்கித் தலைவி பாட்டுடைத் தலைவன்பால் விருப்பமுற்றதைக் குறிப்பினலும் வெளிப்படையினலும் புலப்படுத்தி, அவன் விரைவில் அருள் புரிவானென்பதும் முறையே அமையும்.

தன் உதவியாளான குளுவனோடு பறவை வேட்டையாடிக் கொண்டிருந்த குறவனுக்குக் குறத்தியின் நினைவு வரவே அவன் அத்தொழிலை விட்டு அவளைத் தேடித் திரிதலும் பாட்டுடைத் தலைவனது நகரில் அவளைக் காண்டலும், தன் ஆற்ருமையைப் புலப்படுத்திப் பல செய்திகளை வினவுதலும் அவள் விடை கூறுதலும் பின் இருவரும் ஒருங்குசேர்ந்து பாட்டுடைத் தலைவனை வாழ்த்துதலும் இந்தப் பிரபந்தத்தின் இறுதிப் பகுதியாக அமைக்கப்பெறும். சிற்சில குறவஞ்சிகளில் இம்முறை சிறிது சிறிது மாறுபட்டுள்ளது; சில புதிய உறுப்புக்களும் காணப்படுகின்றன.

தியாகேசர் குறவஞ்சி யென்பது சோழ நாட்டுத் தேவாரம்பெற்ற தலங்களுள் ஒன்றும், பிறக்க முத்தி தருவதும், ஏழுவிடங்கத் தலங்களுள் முதன்மையானதும், பூமிதேவியின் இதய கமலமென்று சிறப்பிக்கப்பெறுவதுமான திருவாரூரிற் கோயில்கொண்டெழுந்தருளியுள்ள ஸ்ரீதியாகேசரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இயற்றப்பெற்றது.

இதனுள் ஏனைய குறவஞ்சிகளிற் காணப்படும் சிற்சில உறுப்புக்கள் காணப்படவில்லை. காப்பும் மங்களமும் கூற பெற்றபின் கட்டியக்காரன் வருதலும் அவன் பாட்டுடை தலைவன் பவனி வருதலைக் கூறுதலும் இல்லை. இங்கே தலை

வழங்கிய பெயர் ராசமோகினி யென்பது. பின்பு விரகத்தால் வருந்தும் தலைவி சந்திரன் முதலியவற்றை நிந்திக்கும் பகுதியில்* தலைவி பாட்டுடைத் தலைவனை விளித்து இரங்குதல் அமைந்துள்ளது.

குறத்தியின் வரவைத் தெரிவிக்கும் அகவலில் திருவாரூரின் பலவகைச் சிறப்புக்களும் தலச் செய்திகளும் மனுநீதிச் சோழனுடைய வரலாறும் சற்று விரிவாகவே அமைந்துள்ளன.

குறத்தி தலைவனது வாசல்வளங் கூறுதலும் தன் ஊர், பேர், தங்கள் சாதியின் மேன்மை, தான் கண்ட தேசங்கள், மலைகள் முதலியவற்றையும் தாங்கள் வாழும் மலையின் வளம், நதிவளம், தான் அறிந்த தெய்வதலங்கள் என்பவற்றையும் கூறுதலும் அமைந்துள்ளன. அண்டகோளங்களின் பகுப்பைக் கூறும் பகுதி இதிற் காணப்படுகின்றது.

பின்னர்த் தலைவி வினவியதற்கு விடையாகத் தான் அறிந்த வித்தைகளைக் குறத்தி கூறுதலும், தான் அதற்குமுன் பலர்க்குக் குறி சொல்லியதையும் அவர்கள் அளித்த பரிசுகளையும் இயம்பலும் காணப்படுகின்றன. பின்பு தெய்வபூசைக்குரியவற்றை அமைக்கும்படி சொல்லித் தான் வழிபடும் தெய்வங்களைத் தனக்கு உதவி புரியுமாறு விளித்துக் குறி சொல்லுதலும் தனக்கு மயல் அளித்த தலைவன் ஊர், பேர், மெய்யடையாளம் முதலியவற்றைத் தலைவி கேட்ப அவற்றைக் கூறி அவளைத் தியாகப்பெருமான் அடையவரும் நாளைக் கூறுதலும் உள்ளன.

தலைவி குறத்திக்குப் பரிசளித்தபின் தும்புரு நாரதர் தோன்றுதல் கூறப்படுகின்றது. சிங்கன் தோன்றுதலும், அவன் குறத்தியைக் காணப்பெறுமல் வருந்துதலும், குறத்தியைத் தேடிய இடங்களைக் குறித்து வினவுதலும், விடையளித்தலும், மாதர் மன்னர் வசீகர மருந்துகளைத் தனக்கு அளித்தால் அவளிருக்குமிடத்தைக் கூறுவேனென்றலும், சிங்கி தோன்றுதலும், சிங்கனும் சிங்கியும் சம்பாஷித்தலும் காணப்படுகின்றன. குறவன் குளுவனோடு சேர்ந்து பறவை வேட்டையாடுதலும், குறத்தியின் நினைவு வரவே குறவன் வருந்துதலும் குளுவனை அவளிருக்கும் இடந்தேடி வருமாறு ஏவுதலும், குறத்தியின் மெய்யடையாளங்களைக் குளுவன் வினவக் குறவன் அவற்றைக் கூறுதலும் அவளைப் பாட்டுடைத் தலைவனது நகரத்திற் காணலாமென்றலும், சிங்கனும் சிங்கியும் சேர்ந்து தலைவனை ...த்துதலும் இந்நூலிற் காணப்படவில்லை. நிற்க.

---

* ...வெக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள், பக்கம், 278.

தியாகேசர் குறவஞ்சியாகிய இப்பிரபந்தத்தின் ஆசிரியர் இன்னா ரென்று தெரியவில்லை. ஆயினும் இவர் 3, 15, 25, 31-ஆம் பாட் டுக்களில் கி. பி. 1684 முதல் 1714 வரையில் தஞ்சையை ஆண்ட மகராஷ்டிர மன்னராகிய சகசி மன்னரைக் கூறியிருப்பதால் அவர் காலத்தவரென்பது மட்டும் தெரியவருகின்றது. இவர் ஸ்ரீ தியாகப்பெருமான்மீது பேரன்பு பூண்டவரென்பது அவ ருடைய பலவகைச் சிறப்புக்களைப் பலபடியாகப் பாராட்டிக் கூறியிருத்தலால் விளங்கும். வாழ்த்துச் செய்யுளில் கன்றாப்பூர் நடுதறி யீசரையும் வேளாளரையும் கூறி யிருப்பதிலிருந்து இவர் கன்றாப்பூர்த் தலத்தில் பற்றுடையவரென்பதும் வேளாளரால் ஆதரிக்கப்பட்டவரென்பதும் அறியப்படுகின்றன.

இப்பதிப்பிற்குக் கிடைத்த பிரதிகள் : என் தந்தையாரவர் கள் பெயரால் அடையாற்றிலுள்ள நூல் நிலையத்தின் ஏட்டுப் பிரதி 1, அதைப்பார்த்து எழுதிய கடிதப் பிரதி 1, என் தந்தையா ரவர்கள் வைத்திருந்த கடிதப் பிரதி 1; ஆக மூன்று; மூன்றிலும் சில பாடல்கள் குறையாக வுள்ளன; 17, 22-ஆம் பாடல்களில் பல்லவியும் அனுபல்லவியும் இல்லை. வேறு பிரதிகள் கிடைத்தால் எல்லாவற்றையும் அமைத்து நன்றாக வெளியிடலாம்.

கிடைத்த பிரதிகளைக் கொண்டு இயன்ற அளவு செப்பம் செய்து இது வெளியிடப்பட்டுள்ளது. இப்பதிப்பைக் கண்ணுறும் தமிழபிமானிகள் தம்மிடமுள்ள பிரதிகளைத் தந்துதவுவார் களாயின் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்வ தோடு விடுபட்ட பகுதிகளை அடுத்த பதிப்பிற் சேர்த்து வெளி யிடுவேன். என் தந்தையாரவர்கள் பெயராலுள்ள நூல் நிலை யத்தின் ஏட்டுப் பிரதியை இப்பதிப்புக்கு உபயோகித்துக்கொள் ளும்படி அன்புடன் அனுமதியளித்த அத்தியக்ஷகர்பால் மிக்க நன்றி பாராட்டுகிறேன்.

## 2. திருவாரூர் மருந்து வெண்பாமாலை.

என் தந்தையாரவர்களுக்கு முன்பு கும்பகோணம் காலேஜில் தமிழாசிரியராக இருந்த வித்துவான் ஸ்ரீ சி. தியாகராச செட்டியார வர்களால், தமக்கு இருந்த கண்ணோயை நீக்கும்பொருட்டு இயற்றப் பெற்றது இந்நூல். இப் பிரபந்தத்தில் தல வரலாறுகளும், பெரிய புராணத்திற் கூறப்படும் நாயன்மாருடைய அருஞ்செயல் களும், திருவிளையாடற் புராணக் கதைகளும் காணப்படும். இதனை என் தந்தையாரவர்கள் 1888-ம் வருஷம் வேறு சில பந்தங்களோடு சேர்த்து அச்சிட்டு வெளியிட்டுள்ளார்க

## 3. தியாகேசர் தாலாட்டு.

இதனை இயற்றியவர் இன்னாரென்று தெரியவில்லை. ஆனாலும் இவர் தியாகேசரிடம் மிக்க பக்தி பூண்டவரென்று தெரிகிறது.

குறவஞ்சிக்கும் மருந்து வெண்பா மாலைக்கும் குறிப்புரை எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ தியாகேசரிடம் பேரன்பு பூண்டவரும், திருச்சிராப்பள்ளி, ஜில்லா வியவசாய சங்கம், ஹோமியோபதி சங்கம், சைவ பரிபாலன சங்கம் இவற்றின் தலைவரும், பிக்ஷாண்டார் கோவில் பண்ணையாரும், தமிழபிமானம் மிக்கவருமான ஸ்ரீமான் ராவ்பஹதூர் G. இராஜகோபால பிள்ளை F. R. H. S. அவர்களுடைய பொருளுதவியைக் கொண்டு இப்புத்தகம் வெளியிடப் பெற்றது. அவர்களுக்குத் தமிழுலகம் மிகவும் கடமைப்பட்டுள்ளது. திருவாரூர் ஸ்தல சம்பந்தமாக இதுவரை வெளி வராத நூல்களையும் வெளியிடுவதில் அவர்கள்மிக்க கருத்துடையவர்களாக இருக்கின்றார்கள்.

இந்த நூல்களை ஆராயும்பொழுதும் குறிப்புரை எழுதும் பொழுதும் ஒப்பு நோக்கும்பொழுதும் உதவி செய்தவர்கள் சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியர் ஸ்ரீ. வி. மு. சுப்பிரமணிய ஐயர் B.O.L. அவர்களும், சென்னை, அடையாற்றில் என் தந்தையாரவர்கள் பெயரால் உள்ள நூல் நிலையத்தின் நூற்பரிசோதகராகிய ஸ்ரீ ச. கு. கணபதி ஐயர், B. O. L. அவர்களும் ஆவர். இவர்களுக்கு எல்லா நலங்களையும் அளித்தருளும்வண்ணம் ஸ்ரீ தியாகேசரைப் பிரார்த்திக்கின்றேன்.

தியாகராஜ விலாசம்
திருவேட்டீசுவரன்பேட்டை,
சென்னை, 20—9—'46

இங்ஙனம்
S. கல்யாணசுந்தர ஐயர்

உ
சிவமயம்

# தியாகேசர் குறவஞ்சி

## காப்பு

1. திங்கள்சேர் சடைய ராரூர்த்
தியாகரதி ராசர் மீதில்
துங்கவங் கார மோகத்
துறைக்குற வஞ்சி பாடப்
பங்கயத் திருமால் வேதன்
பண்ணவர் முனிவர் போற்றும்
மங்களந் தருவா தாவி
வாரணங் காப்புத் தானே.

(குறிப்புரை) துங்கம் - மேன்மை. வங்காரம் - பொன். பங்கயத் திருமால்- தாமரையை ஏந்திய திருமால்; தாமரைப் பூவிலுள்ள திருவையுடைய மால் எனினும் ஆம். வாதாவி வாரணம் - வாதாவி விநாயகர்; ஸ்தல விநாயகர்.

2. மடங்கலா சனர்செங் காவி
மாலைமார் பழக ரேழு
விடங்கினி லுயர்ந்த வீதி
விடங்கத்யா கேசர் மீதில்
வடந்திகழ் கொங்கை மங்கை
மலைக்குற வஞ்சி பாடக்
கடந்திகழ் விட்ட வாசற்
கணபதி காப்புத் தானே.

(கு - ரை) மடங்காசனர் - சிம்மாசனாதிபதி. செங்காவி மாலை - செங்கழு நீர்மாலை. ஏழு விடங்கு - சப்த விடங்கம்; அவை ஆதி விடங்கம், அவனி [விட]ங்கம், புவனி விடங்கம், நீல விடங்கம், நகர விடங்கம், அழக [விடங்க]ம், வீதி விடங்கம் என்பன; திருவாரூருலா, 233-5, குறிப்பு; [ஆ]லங்களிலுள்ள மூர்த்திகளைப் போலல்லாமல் வீதியிலும் எழுக்

தருளுதல்பற்றி வீதி விடங்கரென்னும் திருநாமம் தியாகேசருக்கு உண்டாயிற்று. விட்டவாசற் கணபதி : இவர் சந்நிதியிலுள்ள பெரிய கோபுரத்தையடுத்த வடக்கு வாசலில் எழுந்தருளி யிருப்பவர் ; "துதிகொள் விட்டவாசல் வளர் தும்பிமுகன் வாசலிது" (25) என்பர் பின். கடந்திகழ் கணபதியென இயைக்க.

3. தங்கமா மகுடஞ் சூடுஞ்
சகசிரா சேந்த்ரன் போற்றும்
[1] வங்கமா வரைய ராரூர்
வன்மீகத் தியாகர் மீதில்
கொங்குசேர் குழலாள் தெய்வக்
குறவஞ்சி தன்னைப் பாடச்
செங்கைவே லவனும் [2] தேவ
தேவனுங் காப்புத் தானே.

(கு - ரை) சஹஸிராசேந்த்ரன் : தஞ்சாவூரிலிருந்து ஆண்ட மஹாராஷ்டிர மன்னர். கொங்கு - மணம். வேலவன் - முருகக் கடவுள்.

4. நிரந்தர நேமி மாயன்
நிதிமுசு குந்த ராசன்
புரந்தரன் போற்று மாரூர்ப்
புனிதத்யா கேசர் மீதில்
[3] துரந்தரம் பருவக் காமச்
சுகக்குற வஞ்சி பாட
வரந்தரு தெய்வ வாணி
மலர்ப்பதங் காப்புத் தானே.

(கு - ரை) நிரந்தரம் - எப்பொழுதும். நிதி முசுகுந்தன் - நிதியையுடைய முசுகுந்த சக்கரவர்த்தி. புரந்தரன் - இந்திரன். வாணி - கலைமகளது.

(பிரதிபேதம்) 1. 'மங்கைமா' 2. 'தேவாதி' 3. துரந்தரம் போற்றுந் தியாகக் குறவஞ்சி தன்னைப் பாட'

## தோடையம்

5. கடிகமழ்தண் புஷ்பச் சோலைசூழ்
கமலைவசந் தப்பொற் றியாகர்மேல்
கொடியிடைக்கஞ் சத்துள பாவைநேர்
குறவஞ்சி பாட

வடிசுடர்ச்செஞ் சக்ரச்சோதிமால்
மருகன் நெடுங்கைக் குள்கோடுசேர்
தடவயிற்றன் கொற்றப் பாதமே
தருமன்பு தானே.

(கு - ரை) கடி - மணம். கஞ்சத்துளபாவை - திருமகள். வடிசுடர் - வடிக்கின்ற சுடர். மருகன் - முருகக்கடவுள். கோடு - கொம்பு.

6. சேல்விழியஞ் சொற்கிளியோர் பாகர்
தேவரகண்டப் பெருமாள் மீதில்
கோலவசந் தக்குயில்போல் வீறு
குறவஞ்சி பாட
நாலுமுகம் பெற்றிடுவே தாவும்
நாரணனின் புற்றிடவே வாழும்
வேலவர்செம் பொற்பதமெந் நாளும்
மிகுமன்பு தானே.

(கு - ரை) தேவரகண்டப் பெருமாள்: தியாகேசர் திருநாமம்; "திருமாளா தாட்கொண்ட தேவ ரகண்டப், பெருமாள்" (திருவாரூருலா, 28.)

7. (1) மங்களம்தியா கேசருக்கு மங்களம்மால் பூசிதர்க்குச்
செங்கழுநீர்த் தொடையர்க்குச் செயமங்களம் (மங்)
(2) வீதிவிடங் கேசருக்கு விண்ணமரர் பூசிதர்க்குத்
தூதிரவிற் சென்றவர்க்கு மங்களம் (மங்)
(3) தென்றல்வாச லழகருக்குச் செவந்தித்தோ டணிபவர்க்குக்
கொன்றைமலர் வேணியர்க்கு மங்களம் (மங்)
(4) கம்பிக்கா தழகருக்குக் கமலைத்தியா கேசருக்குச்
செம்பொற்சிங் காதனர்க்குச் செயமங்களம் (மங்)

* * *

(கு - ரை) (1) செங்கழுநீர்த் தொடை: தியாகேசருக்குரிய மாலை; தொடை - மாலை; "கழுநீர், மாலை யழகா மணிமார்பா" (தமிழ்நா. 208.) (2) தூது சென்றது சுந்தரமூர்த்தி நாயனர் பொருட்டு. (3) தென்றல் வாசல்: "மன்றற் றிருச்சா லகத்து வழிநுழைந்து, தென்ற றவழுஞ் செழுங்காவே" (திருவாரூருலா, 172); இது ஸ்ரீ தியாகேசர் பக்கத்துள்ள கற்பலகணி. (4) கம்பிக்காதழகர்: தியாகேசர் திருநாமம்; "வடிந்த கம்பிக் காதழகானவர்" (...க்கோவை, 331.) செம்பொற் சிங்காதனர்: "தண்ணமணிச் சிங்கா... பெருமாள்" (திருவாரூருலா, 27.)

## *மோகினி தோன்றல்

### விருத்தம்

8. நிதிவளங் குலவும் வீதி
நிறைந்தசெந் தமிழ்சே ராரூர்ப்
பதிவளர் தியாக ராசர்
பவனிகண் டாசை கொண்டே
துதிபெறு மரம்பை போலச்
சுரதமோ கனவொய் யார
ரதிபதி மெச்சு மோக
ராசமோ கினிவந் தாளே.

(கு - ரை) பவனி - உலா. ரதிபதி - மன்மதன்.

### பல்லவி

9. ராசமோகினியும் வந்தாள் உல்லாசமாக
ராசமோகினியும் வந்தாள்.

### அனுபல்லவி

வாசவன் பணியும்த்யாக ராசர்தம் கமலைநாட்டில்
மத்தள தாளவி தத்துட னேகதி தத்திமி
[4] தித்திமி தளங்கு திங்கிண தோமென. (ராசமோ)

### சரணம்

(1) அன்ன நடையா மென்னவே மலர்க்குழலில்
அளிக ளிசைகள் பண்ணவே
கன்னியர் [5] புடைதுன்னப் பொன்னின் பணிகள்மின்ன
கச்சுமுலைச்சியர் மெச்சிய செக்கணித செங்கிடதக
தகுங்கிண்டுதடி தளங்கு திங்கிணத் தோமென்ன
(ராசமோ)

(2) மதனரதிக்கு மிஞ்சியே சீதபஞ்ச
வன்னக் கிளிபோல் கொஞ்சியே
விதனம் பொறுமல்வஞ்சி விரகத்துதியைக் கெஞ்சி

(பா-பே.) 4. 'தத்தமி தாகத் தளங்கு' 5. 'மிகத்துன்னவே'

---

* காப்புக்குப்பின் கட்டியக்காரன் வருகை காணப்படவில்லை. கிடைத்த பிரதிகளிலெல்லாம் இங்ஙனமே உள்ளது. தியாகேசர் பவனிவருதலைக் குறியாமல் ராசமோகினி அவர்மேல் ஆசை கொண்டாளென்று குறவஞ்சியாசிரியர் மிகச் சுருக்கமாகத் தெரிவித்துள்ளார்.

மிக்க விழிக்கணை தைக்க மயக்கிய
தக்குதிக்குதா தளங்கு திங்கிண தோமென்ன
(ராசமோ)

(3) நெஞ்சமகிழ்ந்து நாடியே மல்லிகைமுல்லை
நிறையக் குழலிற்சூடியே
செஞ் [6] சொலிசைகள்பாடித் தியாகரேசரைக் கொண்டாடி *
செங்கனகந்திகழ் கொங்கை குலுங்கவே
தொங்கத் திங்கிண தோதிமி தோமென. (ராசமோ)

(கு - ரை) அளி - வண்டு. பஞ்சவன்னக் கிளி - ஐவகை நிறமுடைய கிளி. செஞ்சொல் - மூவகைச் சொற்களுள் முதலாவது.

## வெண்ணிலாத்தரு

10. (1) வால சந்திரனே யெவர்க்கும்
வஞ்சனை யாகாதுகண்டாய் வெண்ணிலாவே—வீணே
காலம்போம் [7] வார்த்தைகள் நிற்கும்
கண்டகருமம் நான்சொன்னேன் வெண்ணிலாவே.

(2) சோலிசெய்ய வேணுமென்று
துணிந்து [8] விண் ணெழுந்துவந்தாய் வெண்ணிலாவே—காக்கும்
வேலியே பயிரழித்தால்
விளையும்வா றெப்படிசொல்வாய் வெண்ணிலாவே.

(3) தெளியாத கலக்கமாகச்
செங் [9] தழலை வீசலாமோ வெண்ணிலாவே—பாரில்
எளியாரை வலியார்கேட்டால்
வலியாரைத் தெய்வம்கேளாதோ வெண்ணிலாவே.

(4) சிலைமதன் றனையெரித்த தியாகரென்னைச்
சேரக்காண்பாய் வெண்ணிலாவே—நாளைத்
தலைபிடித்த பின்பல்லோ
[10] தாழக்குனிவாய் நான்சொன்னேன் வெண்ணிலாவே.

(கு - ரை) வாலசந்திரன் - பிறை. காலம்போம் வார்த்தை நிற்கு மென்பது ஒரு பழமொழி. சோலி - காரியம். கேட்டல் - தண்டித்தல் என்னும் பொருளது.

(பி-ம்.) 6. 'சொற்கவிகள் பாடித் தியாகராசரைக்' 7. 'வார்த்தையே' 8. 'விண்ணிலெழுந்து' 9. 'தழல்போல்' 10. 'தாட்குனிவாய்'

---

* இதற்குப்பின், 'பங்கயக் கதம்பம்நீடிப், பங்குனி ருத்திரனை நாடி ...ன்ற அடிகள் ஒரு பிரதியிலுள்ளன.

## தென்றல் தரு

### இராகம் : காம்போதி.

11. (1) செந்தமிழ்மேவிய தென்மலயம்
தந்தருள் தென்றலே—நீயும்
தேறிவிளையாட வேறிடமில்லையோ தென்றலே.

(2) என்றன் கந்தமலர்க்குழல்
சந்தனச் சோலையோ தென்றலே—இரு
காவிவிழிகளுன் வாவிக்கமலமோ தென்றலே.

(3) அதிசீதளமான நீ
செந்தழல் வீசுருய் தென்றலே—இப்போ
சேர்க்கைக்குணங்கொண்டு இயற்கைக்குணம்விட்டாய் தென்றலே.

(4) அதிபாதக மல்லவோ
மாதர்க்கிடர் செய்தாய் தென்றலே—நீயும்
பார்த்தால் பசுப்போலே பாய்ந்தாற் [11]புலியானுய் தென்றலே.

(5) ஆசைக் கொடுங்கனல்
ஆருமல் மூட்டவோ தென்றலே—இந்த
அண்டமும் பாரும் அளாவிவருகிருய் தென்றலே.

(6) ஓசைக் கடலாய்
உடுபதி யாகிருய் தென்றலே—நான்
உடுத்தகலையும் உடம்பும் மறந்தேன் தென்றலே.

(7) எள்ளளவுந் தயவில்லாத
பாவிநீ தென்றலே—என்னை
இத்தனைபாட்டுக்கு மிலக்காகச்செய்தாய் தென்றலே.

(8) உள்ள மகிழ்ந் தாரூரர்
என்னைச் [12]சேரவருவார் தென்றலே—ஐயோ
உன்பகை செங்கதிர் முன்பனியாகுமே தென்றலே.

(கு - ரை) பார்த்தாற் பசு பாய்ந்தாற் புலி : "பசுத்தோல் போர்த்துப் புலிப் பாய்ச்சல் பாய்வரோ புரிவிலாதார்" (வி. பா. அருச்சுனன்றவநிலை. 95.) உடுபதி - சந்திரன். பாடு - துன்பம்.

12. (1) எதிரிட்[13]டென்னை யெய்யுருய் மன்மதா—இனி
என்[14]மனந் துணிந்தாயோ மன்மதா

---

(பி-ம்.) 11. 'புலிபோலானுய்' 12. 'சேர்வர்' 13. 'டேபெ...'
14. 'மனத்துணிவு பார்'

### மன்மதன் தரு

(2) பதினெட்டுப் பாஷைக்கும் மன்மதா—தும்மல்
[15]பலபல உண்டோசொல் மன்மதா
(3) உனக்கிது தர்மமோ மன்மதா—பெண்கள்
உயிர்கொல்லத் துணிந்தாயோ மன்மதா
(4) தனக்கென்று வரும்போது மன்மதா—அப்போ
தானே தெரியவரும் மன்மதா
(5) விடையில் பவனியார் மன்மதா—நெற்றி
விழிப்பார்வை மறந்தாயோ மன்மதா
(6) படையின் கலக்க[16]மெல்லாம் மன்மதா—முன்பின்
பட்டுந் தெரிந்திலேயோ மன்மதா
(7) வன்மீகத் தியாகேசர் மன்மதா—[17]நாளை
மருவ வருவார்சொன்னேன் மன்மதா
(8) தன்வீட்டு விளக்கென்று மன்மதா—முத்தம்
தானிடப் போமோசொல் மன்மதா.

(கு - ரை) மருவ - என்னை அடைய
(பி-ம்.) 15. 'பலபட' 16. 'மென்ன' 17. 'என்னை'

### மோகினி புலம்பல்

13. (1) நாரணன் நான்முகன்
நாடோறுந் தேடிய தியாகராசா—உன்னை
நம்பின என்னை நட்டாற்றில்
கைவிட லாமோ தியாகராசா
ஆரணப்பொருளே தென்னாரூர்க்
கரசான தியாகராசா—என்னை
யார்க்கு வருவிருந்தென்
றசட்டை செய்யலாமோ தியாகராசா
(2) பேராசை கொண்டுநா
னூரோம லானேனே தியாகராசா—நான்
பெண் புத்தியாலே
பிழைமோசம் போனேனே தியாகராசா
தீராத நெஞ்சுக்குத்
தெய்வமே துணையன்றோ தியாகராசா—ஆசைத்
திகிலுக்குப் பொருள் தேடத்
தெரியா தென்செய்குவேன் தியாகராசா.

(3) வானமின்று புவியில் விளைந்த
கதைபோ லானேன் தியாகராசா—நாளும்
வாடும்பயி ருக்கின்ப மழைபோல
வந்தருள் செய்குவாய் தியாகராசா
ஆனதாய ரரும்பகை
ஆகினு லென்செய்வேன் தியாகராசா—பாரில்
அடுத்தாரை ரக்ஷிப்பது
ஐயாஉன் கடனல்லோ தியாகராசா.

(4) ஏசுவார்க்கெல்லா மிடமாய்
இருந்தேனே தியாகராசா—நான்
ரதிமதன் கணைக்கு நான்
எதிராக நின்றேனே தியாகராசா
வாசமும் மலரும்போலே
மதனும் ரதியும்போலே தியாகராசா—என்றன்
மையல் தணியவே வந்து
மருவி யணையவேணும் தியாகராசா.

(கு - ரை) நம்பினவரை நட்டாற்றிற் கைவிடல் என்பது ஒரு பழமொழி. ஆரூர்க்கரசு என்றது அரசராக இருந்து தியாகேசர் ஆட்சி புரிந்தமைபற்றி; ஓமல் : வழக்குச் சொல், திகில் - நடுக்கம். தாயர் என்றது ஐவகையாரை.

## சகி தோன்றல்

### விருத்தம்

14. தோகைகள் நடனங் கண்டு
சுந்தரக் குயில்கள் போல
வாகுசேர் கமலை வாழும்
வன்மீகத் தியாகர் நாட்டில்
நாக கன்னிகை யாமென்ன
ராசமோ கினிக்கன் பான
மோகன ரேகை செம்பொன்
முகிழ்முலைச் சகிவந் தாளே.

(கு - ரை) வாகு - அழகு. கமலை - திருமகள்.

**இராகம்: பந்துவராளி**

**பல்லவி**

15. மோகன ரேகை வந்தாள்—முத்துமுத்தான
மோகன ரேகை வந்தாள்.

**அனுபல்லவி**

மோகன ரேகையும் வந்தாள்
முல்லைநகை வல்லிபோல
நாகரிகத் தென்கமலை
நாயகத் தியாகேசர் நாட்டில். (மோகன)

**சரணம்**

(1) கொந்தளச் சரம்புனைந்து
சந்திரனுக் கிசைந்தமுகச்
சிந்துரச் சிறுநுதலும்
விந்தை விந்தையாய்ச்
சுந்தரச் செந்திரு மங்கை
சந்தனச் சுகந்தம்வீச
இந்தமெய்ச் சுருபங்கொண்டு
வந்தது நிச்சயமென்ன (மோகன)

(2) பங்கயங் கோங்கலரென்னப்
பொங்கமிக்க தங்கவளை
செங்கையில் துலங்குரெத்தின
கங்கணமின்ன
இங்கிதக் கின்னரிகொண்டு
சங்கிதக் குயிலைப்போலும்
குங்குமக் குரும்பைக் கொங்கை
மங்கையர்க் கரசியென்ன (மோகன)

(3) ராசராசர் பணியேக
ராசனுதவிய சகசி
ராசமகிபதிச் சோழ
ராசதேசஞ்சேர
ராசமோ கினியைத்தேடி
ராசயோகம் மிகும் தியாக
ராசர்மருவுங் கமலை
ராசசபை தன்னைநாடி. (மோகன)

(க - ரை) சிந்துரம் - சிவந்தபொடி. கோங்கலர் : பொன்னுக்கு
கின்னரி - ஒருவகை வாத்தியம்.

### சந்த விருத்தம்

16. புகழ்கம லாபுரி மேவிய தியாகர்
    பொருப்பினில் மேன்மேலும்
முகமலர் வாட மனோகர மான
    முலைத்துணை பொன்மேவச்
சுகவிழி நீர்தர வாயிதழ் வீறு
    துடித்திட மெய்சோரத்
திகழ்மதி போயுழல் மோகினி யேது
    திகைப்பது சொல்வாயே.

(கு - ரை) பொன் - பசலை. மதி - புத்தி.

### மோகினி சொல்லுதல்

### இராகம் : நாதநாமக் கிரியை

17. (1) என்றன் விரகம் [18]பொல்லாது
    இரவு விடியாதிப்போது
சந்தனங் குளிர்ந்திடாது
    சகியே கேளாய்

(2) வரவர மயக்கமாச்சு
    மையல் வெள்ளம் வெகு நீச்சு
சரசமோ விதென்ன பேச்சு
    சகியே கேளாய்

(3) புத்தியுள்ள பெண்ணே தூது
    போபோவென்றால் போகாதேது
சத்துருவோ நீ யிப்போது
    சகியே கேளாய்

(4) செஞ்சொல் மேவுதேன் கமலை
    தியாகர் வாரா தென்னதொல்லை
தஞ்சம் வேறொருவ ரில்லை
    சகியே கேளாய்.

(கு - ரை) விரகம் : காமம் என்னும் பொருளது. மையல் - மயக்கம். மையல் நீச்சு : "இறங்குதுறையி னீத்தாயிற் றென்ன மாயை யிடத்து மையல்" (பிரபு. பிரபுதேவர். 32.)

(பி-ம்.) 18. 'பொய்யாது'

## வேனல் தரு

### இராகம் : பைரவி

18. மாலைப்பொழுதும் வந்துதேயென் - கையிலிட்ட
வளையுங் கழன்று சிந்துதே
ஆலைச் சிலை வளைப்பானே - மதனென்றன்
அங்கமெலாம் துளைப்பானே
(2) கோடைக்குயி லுங் கூவுதே - சகியே யென்றன்
கொங்கை பசலை மேவுதே
வாடைப் புலிதான் கொல்லுமோ - தூதுநடந்த
வண்டு[19] தான் சொல்லுமோ
(3) என்னால் படத்தான் தள்ளுமோ-[20]நான்கொண்டகாதல்
இத்தனை சிங்கி கொள்ளுமோ
முன்னால் விதித்த விதியோ - பவனிகண்டு
மோகித்த தேழை மதியோ
(4) அய்யோ விதென்ன தொல்லையே - உன்னை அல்லாம
லாதர வாருமில்லையே
பொய்யாசை கொண்ட தல்லடி - தியாகேசருக்குப்
பொருந்தத் தெரியச் சொல்லடி.

(கு - ரை) ஆலைச்சிலை - கரும்புஆகிய வில். சிங்கி - கொடுமை.

## சகி சொல்லுதல்

### கட்டளைக் கலிப்பா

19. அம்பு யாசனப் பொற்பதம் நாடொறு
மாருஞ் சீர்பெறு மாரூரர் வீதியில்
செம்பொன் னாட்டுள்ள தெய்வக் குறத்திதான்
செல்லும் வேந்தர் திருமாத ருக்கெலாம்
நம்பு மேன்மைக் குறிபார்க்க வந்தனள்
நானழைத்து வருவேன் நலமதாய்க்
கும்ப மாமுலைப் பெண்ணர சேமனக்
குறைகள் தீரக் குறிகேட்க வேணுமே.

(கு - ரை) அம்புய......வீதி - செந்தாமரை நாறிய திருவீதி யென்பது திருவாரூர்த் திருவீதிகளில் ஒன்று. கும்பம் - குடம்.

(பி-ம்.) 19. 'தான் என்' 20. 'கொண்ட விரகம்'

## குறத்தி தோன்றல்

### அகவல்

20. திருமகள் மருவுஞ் செங்கண்மா லுரம்போல்
அருள்புவி மடந்தை யம்பொன்மா முடிபோல்
புரந்தரன் புரக்கும் பொன்னுல கதுபோல்
வரந்தரும் அயன்வாழ் வனசமா மலர்போல்
விளங்குதென் னாரூர் வியன்பதி தழைக்க
உளங்கனி வாக யோகா சனத்தில்
அண்டருந் துதிக்க அரசிருந் தருள்பூ
மண்டலம் துதிக்க வளர்பரா சத்தி
வலதுபா கத்தில் மான்மத மடக்கி
இலகுவன் மீகவி லிங்கமுற் பவித்த
ஆடகப் புற்றுக் கடுத்ததென் றிசையில்
தேடருஞ் செம்பொற் சிங்கா தனத்தில்
போற்றிசெய் திமையோர் புகழ்ந்திடத் தென்றற்
காற்றில்வீற் றிருக்கும் கமலைத் தியாகர்
நீடழ கிசைந்து நிறைந்தசெவ் வந்தித்
தோடழ கிலகும் சுந்தரத் தியாகர்
வேலைநே ரோடை விளங்குசெங் கழுநீர்
மாலைமார் பழகர் வசந்தத் தியாகர்
கரிச்சாந் தொளிருஞ் சந்தனத் தியங்கும்
திருச்சாந் தொளிருந் [21]தேவ ரகண்டர்
தினகரப் ப்ரபைபோல் சிறந்த செம்மேனிக்
கனக வசந்த கற்பூரத் தியாகர்
முன்னழ கதிலும் மும்மடங் கதிகம்
பின்னழ குள்ள பெருமைத் தியாகர்
பண்களுக் கிசைந்த பைம்பொன் னாடரவக்
[22]கிண்கிணி யரவம் கிளர்ந்த பொற்பாதர்
மூப்பழ ககலா முதிர்திரு வந்திக்
காப்பழ கிசைந்த கமலைத் தியாகர்
கம்பிக் காதழகர் கவிமழை பொழியும்

(பி-ம்.) 21. 'செம்பொற்றியாகர்' 22. 'கிங்கிணிக் காலால்'

உ

திருச்சிற்றம்பலம்

# ஸ்ரீ தியாகேசர்

## தேவாரம்.

உயிரா வணமிருந் துற்று நோக்கி யுள்ளக் கிழியி னுருவெய்தி
உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தா லுணரப் படுவாரோ டொட்டி
அயிரா வணமேறு தானேறேறி யமரர்நா டாளாதே யாரூ ராண்ட [வாழ்தி
அயிரா வணமேயென் னம்மானேநின் னருட்கண்ணா னோக்காதா ரல்லா
தாரே.]

தியாகேசர் திருமாலுடைய இதயத்தாமரையில் எழுந்தருளியிருந்து அவராற் பூசிக்கப் பெற்றவர். அவர் விருப்பத்திற் கிணங்கிச் சோமாஸ்கந்தத் திருவுருவத்தோடு காட்சிவழங்குபவர். அஜபாநடேசர், அசைந்தாடும் பெருமானென வழங்கப்பெறுவர். இந்திரன் விரும்பியபடி தேவலோகத்துக்கு எழுந்தருளியவர். இந்திரன் தன் பகையைவெல்ல அருள்செய்தமையால் இந்திர வரப் பிரதர், இந்திர பயஹரர் என்னும் திருநாமங்களைப் பெற்றவர்.

வலன் என்னும் அசுரனால் துன்புற்ற இந்திரன் முசுகுந்தனது உதவியை நாடச்செய்து அவன் வேண்டுகோளால் வேறு ஆறு திருவுருவங்களோடு சோழநாட்டில் எழுந்தருளியவர். தாம் சிவராசதானியாகிய திருவாரூரில் அமர்ந்து ஏனைய ஆறு மூர்த்திகளையும் வேதாரணியம் முதலிய ஆறு பதிகளில் அமரச்செய்தவர். திருவாரூர்த் தியாகேசர் வீதியிலும் எழுந்தருளுதலால் **வீதிவிடங்க**ரெனப்படுவர்.

தென்றற்காற்றில் திளைப்பவராதலின் தென்றல் வாசலழகரென்று சிறப்பிக்கப்பெறுகின்றார். வசந்தவிநோதர், வசந்தத்தியாகர் என்னும் திருநாமங்களும் இதுபற்றி எழுந்தனவே. தென்றற்காற்றுவரும் சாளரம் தென்னந்திருவாசல் என இப்போது வழங்குகின்றது.

இரத்தின சிம்மாசனத்திருப்பதால் **இரத்தினசிம்மாசனாதிபதி** யென்றும், அரசசின்னமாகிய வீரகட்கம் திருமுன் விளங்குவதால் வீரகண்டயப்பெருமாள் என்றும் தேவர்களைக்காத்தும் அவர்களால் அறியப்பெறாமையின் தேவரகண்டப் பெருமாளென்றும் திருநாமங்கள் படைத்தவர்.

இவருக்குச் செவ்வந்திப்பூத் திருத்தோடும் செங்கழுநீர்மாலையும் அடையாள மலர்ப்பணிகள். இதனாற் செவ்வந்தித்தோடழகர், செங்கழுநீர்த்தாமரென்பன இவருக்கு உண்டான திருநாமங்கள். இவருடைய திருவடிகளில் நாகமே கிண்கிணியாதல்பற்றி ஆடரவக் கிண்கிணிக்காலழகரென்னும் திருநாமம் உண்டாயிற்று.

இவருடைய முன்னழகைவிடப் பின்னழகு பன்மடங்கு மிக்கது. அதனால் முன்னிலும் பின்னழகரென்று இவருக்கு ஒரு திருப்பெயருண்டாயிற்று.

இவருடைய இடப்பக்கத்தில் அருளாளர்களால் ‘கொண்டி’ யென்று வழங்கப்பெறும் அம்மை எழுந்தருளியிருக்கின்றார்.

தமக்கும் அம்மைக்கும் இடையே ஆனந்தமுருகன் அமரப்பெற்று இம்மைக்குப் பொன்னையும் போகத்தையும் மறுமைக்கு ஞானத்தையும் வீட்டையும் அளிக்கும் கண்கண்ட தெய்வமாக விளங்கிவருபவர் நிறைசெல்வத்தியாகரே.

வித்துவான் S. தண்டபாணி தேசிகர்.




*In memory of the late Sriman B. C. Avudaiappa Pillai Avl.*
*of Bikshandarkoil*

நம்பிக்காத் தூது நடந்த தியாகர்
கொற்றமா லூரத்திற் குடிபுகுந் தவர்செய
லுற்றபூ சனைகண் டுகந்த தியாகர்
வாசவ னுலகில் வாசமுற் றவன்றன்
பூசனை யுகந்த புனிதத் தியாகர்
பொன்னுல கிழிந்து புவிமுசு குந்த
மன்னவன் [23]வணங்க வந்த தியாகர்
மனுநெறி தழைக்க வையகம் புரக்கும்
தினகர குலத்தில் திகழ்மனு வேந்தன்
மெய்யன் புலகில் விளங்கிட வேண்டி
அய்யன் பசுவா யந்தகன் கன்றுய்
அடிமுடி [24]நேடிய வம்பொன் வீதியில்
மணிமுடி மன்னர் வருநெருக் கத்தில்
அன்றர சிளங்கன் றரியதேர்க் காலிற்
கன்றரை படவே கபிலையுங் கதறிச்
செம்பிய னரசு செலுத்திய மணியைக்
கொம்பினு லசைக்கக் கொற்றவ னடுங்கி
முன்னைநாள் விதியோ முறைமையோ விதுதான்
என்னகா ரணமென் றியம்பவே யமைச்சன்
ஆவின்மெய்த் துயர மரசனுக் குரைக்கப்
பாவியே னிந்தப் பழிகழு வுதற்கு
இளவர சனையூர்ந் திடுவதே வழக்கென்
றளவிலார்க் குரைத்தவ னமைச்சனை யனுப்ப
மந்திரி யரசன் மதலைதன் முகத்தில்
எந்திட முரைப்போ மென்றவ னுயிர்விடும்
சேதிகேட் டரசன் சிவாய நமவென்
றோதியஞ் செழுத்து முளந்தளர்ந் துருகித்
தொடர்ந்திளம் பசுவின் துயர்க்கா வென்சுதன்
படர்புக ழமைச்சன் பழிக்கு நானென்
றுன்னியே மகனை யூர்ந்தபி னுகந்து
தன்னுயிர் மாய்க்குந் தகைமைகண் டிரங்கிப்
பொன்னிலத் [25]தவர்கள் பூமழை பொழிய

(பி-ம்.) 22. 'வணங்கும் வசந்தத்' 24. 'மெய்யன்' 25. 'தமரர்'

இந்நிலத் தவர்க ளிருகணீர் சொரியச்
செந்திரு மாயன் திசைமுகன் முனிவர்
இந்திரன் முதலோ ரிருபுடை நெருங்கத்
தவளமால் விடைமேல் தண்ணிலா வணிந்த
பவளவார் சடையார் பருதிமன் னவன்முன்
ஆட்சியாய்த் தோன்றி யனைவருங் காண
காட்சியே கொடுக்குங் கமலைத் தியாகர்
ஆவிளங் கன்று மமைச்சனு மனுவின்
கோவிளங் கன்றுங் கூடவே யெழுந்தே
சுந்தரக் கன்றுஞ் சுரவிபா லிணங்க
மைந்தனு மமைச்சனு மன்னனை வணங்க
மன்னனு மகிழ்ந்துடன் மழவிடைப் பாகர்
பொன்னடி பணியும் பொழுதுள மிரங்கி
அரசனே யுன்ற னன்புகண் டுகந்தோம்
வரைசேர் புவியில் மனுநெறி நடத்தி
உன்பெருங் கீர்த்தி யுலகினில் நிறுத்திப்
பின்புபே ரின்பம் பெறுவைநீ யென்னத்
திருவருள் புரிந்த தேவ ரகண்டர்
அருமறைப் பொருளா யமர்ந்த தியாகர்
ஆய்ந்தநூற் புலவ ரடிக்கா யிரம்பொன்
ஈந்தசைந் தாடு மெம்பிரான் பவனி
வருதல்கண் டிரங்கி மயங்கிமால் பூண்ட
முருகல ராச மோகினி தனக்குக்
கைக்குறி பார்த்து மெய்க்குறி யுரைக்கத்
துரைப்பெண் ணெனவே வரைப்பெண் வடிவாய்
மருமலர்ச் சுகந்த மலர்க்குழல் முடித்துப்
பருமணிச் சுட்டிப் பட்டமு மணிந்து
இந்திர தனுவுக் கிணையெனும் நுதலில்
சிந்துரத் திலதம் தீட்டிமால் பூட்டி
அம்பெனும் விழிக்கே யஞ்சன மெழுதித்
தும்பிவெண் கோட்டால் தோடுகா தணிந்து
சவடிபொற் பதக்கம் சரப்பளி முன்கை
பவளமேல் வளைகள் பன்மணிக் கடகம்

கரகங் கணங்கள் கனகநற் குலிசம்
அரசிலை தொங்க லரைநா லிலங்கத்
தமனியச் சிலம்புந் தண்டையுஞ் சதங்கையும்
கமலமென் பதத்திற் கலின்கலி னெனவே
சங்குமா மணிகள் தரித்தபொன் முலைமேல்
குங்கும கதம்பங் [26]குளிர்பெறத் திமிர்ந்து
குலவிய செம்பொற் குறப்பெட்டி யேந்தி
மலரெனுங் கரத்தில் மாத்திரைக் கோலும்
கொண்டுநா ரதரே குறவஞ்சி யாகி
அண்டர்வா னுலகத் தரம்பையர் போல
பிடியிடை யன்னப் பேடுபோல் நடந்து
கொடியிடை துவளக் குவிமுலை குலுங்கச்
சிலைக்கிணை நுதலாள் சீர்பெறுந் தெய்வ
மலைக்குற வஞ்சி வந்துதோன் றினளே.

(கு - ரை) உரம் - மார்பு. வனசம் - தாமரை. வலது......லிங்கம் : இதிலுள்ள வரலாறு **திருவாரூருலா**, 3-5-ஆம் கண்ணிகளாலும் அவற்றின் குறிப்புரையாலும் அறியப்படும். இமைமோர்-தேவர். தென்றற்காற்றில்...தியாகர்: "தென்றல் வாசலழகருக்கு" (7.) செவ்வந்தித்...தியாகர் : 7. வேலை - கடல். செங்கழுநீரோடை : ஐந்துவேலிப் பரப்புடையது. திருச்சாந்து - பச்சைக்கருப்பூரம் ; "காந்தி, திவளப் பொலிவதெனச் செந்திருமெய் யெங்கும், தவளக் கருப்பூரஞ் சாத்தி" (**திருவாரூருலா**, 66-7.) முன்னழ...... தியாகர் - முன்னிலும் பின்னழகரென்பது தியாகேசர் திருநாமங்களுள் ஒன்று. ஆடரவக் கிண்கிணிக்கால் : "ஆசையுடனுடு மாடரவக் கிண்கிணியும்" (**திருவாரூருலா**, 336.) திருவந்திக்காப்பு இத்தலத்தில் சிறப்புடையது. நம்பி - சுந்தரமூர்த்தி நாயனர். மாலுரத்தில் - திருமாலின் மார்பில். உகந்த - விரும்பிய. வாசவன் - இந்திரன். தியாகராச மூர்த்தியை இந்திரன்பாற் பெற்றுப் பூமியில் எழுந்தருளுவித்தவர் முசுகுந்த சக்கரவர்த்தி யென்பது தலபுராண வரலாறு. தினகர குலத்தில் - சூரிய குலத்தில். அய்யன் - சிவபெருமான், அந்தகன் - யமன் ; "ஈசனெரு பசுவா யேமனெரு கன்றாகி, வீசுபுக ழாரூர் வீதிவந்தா ரம்மானை" (தனிப்.) அடிமுடி நேடிய வீதி : திருவீதிகளுள் ஒன்று. அரசிளங்கன்றினது தேர்க்காலில். கன்று - பசுவின் கன்று. கபிலை - பசு. செம்பியன் - மனுநீதிச் சோழன். மதலைதன் - வீதிவிடங்கனுடைய. சுதன் - மகன், தன் உயிர் - மனுநீதிச் சோழன் தன்னுடைய உயிரை. அடிக்காயிரம்பொன் ஈந்து : "அடியொன்றுக், குய்யும் படிபசும்பொ னோரா யிரமுகந்து, பெய்யுந் தியாகப் பெருமானே" (**திருவாரூருலா**, 172-3) ; "ஏரேறு செம்பொ னடிக்கா யிரநல்கி யெப்பொழுதும், தேரேறு கின்றவர்" (**ஆரூர்க்கோவை**, 475.) அசைந்தாடு மெம்பிரான் :

மணித்தண்டி லசைந்தாடிய் பெருமானென்பது தியாகேசர் திருநாமங்களுள் ஒன்று. முருகுஅலர் - வாசனை பரவிய. இந்திரதனு - வானவில், நுதல் - நெற்றி. அஞ்சனம் - மை. தும்பி - யானை. குலிசம் - ஓராபரணம். திமிர்ந்து - பூசி. சிலை - வில்.

(பி-ம்.) 26. 'குளிர் பன்னீர் தெளித்து' 27. 'வெற்பில் வானவர் வீர'

**இராகம் : சௌராட்டிரம்**

21. கயிலைவெற் பிறைவர் வீர
கண்டயத் தியாகர் நாட்டில்
சயிலமொப் பனைகொள் செம்பொற்
றடமுலைக் கிடைதள் ளாட
அயில்விழிக் கடைக்கூ ரம்பால்
ஆடவ ராவி கொள்ளும்
குயில்மொழிக் குமுதச் செவ்வாய்க்
குறவஞ்சி தோன்றி னாளே.

(கு - ரை) வீரகண்டயத்தியாகர் : தியாகேசருடைய வாட்படை வீர கண்டயமென்று கூறப்படும்; "புவனதிகாக்கும், படைவீர கண்டயத்தைப் பாரீர்" (திருவாரூருலா, 155.) ஒப்பனை - அலங்காரம். தள்ளாட - தளர.

22. (1) *சிகரகிரி நிறைவனச முகநிகர்
திகிரிமுலை பளபளெனவே
மகரகே தனமதன ரதியென
வதனமதி தளதளெனவே
சகலவே தபுராண சுரகண
சமுகத்தியாகர் நன்னாட்டிலே
சுகசரோ ருகசரண பரிபுர
சுரதமோ கனரம்பைபோல (குறவஞ்சிவந்)

(2) குளிருமலர் புனையளக மிசையளி
குமிறுமிசை குமுகுமெனவே
ஒளிகொள்கமு கிணையிலகு களமிசை
புழுகுகம கமகமெனவே
தளவநகை யிளநிலவு தரவொரு
புளகவன மயில்போலவே
வளமையுட னடியவர்கள் பணிதுரை
வசந்தத்தியாகர் நன்னாட்டிலே (குறவஞ்சிவந்

* இந்த 22-ஆம் பாட்டு ஒரு கீர்த்தனையின் சரணங்கள் போலும். ஒரு பிரதியிலும் இதற்குப் பல்லவியோ அனுபல்லவியோ காணப்படவில்லை.

(3) தவளவளை நவமணிகள் பலபணி
சரிகள்கல கலகலெனவே
குவளைமலர் விழிவிரக வனிதையர்
குறிசொல்லு சொல்லுகெனவே
பவளவிதழ் மொழிகுயிலின் மொழிநிகர்
பகருமிசை கலுகுலெனவே
கவள[28] மதவடு கரியி னுரிதரு
கமலைத்தியாகர் நன்னாட்டிலே. (குறவஞ்சிவந்)

(கு - ரை) சரோருக சரணம் - தாமரைப் பூவைப்போன்ற பாதம். அளகம் - கூந்தல், இணை - ஒப்பு. களம் - கழுத்து. தவளவளை - வெள்ளிய வளை, கரியினுரி - யானைத்தோல்.

(பி-ம்.) 28. 'மதகொல்'

இராகம் : மத்தியமாவதி

பல்லவி

23 சிங்காரக் குறவஞ்சி வந்தாள்—ஒய்யாரமாகச்
சிங்காரக் குறவஞ்சி வந்தாள்.

அநுபல்லவி

சங்கரர் பொங்கர வந்திகழ் கங்கணர்
செங்கழு நீர்புனை தியாகர்நன் னாட்டில். (சிங்)

சரணம்

(1) திலத நுதலில் வேர்வைகாண அழகுகண்டு
தெய்வ ரம்பையர் உள்ளம்நாணப் பூரணசந்திரன்
நிலவென நகைதரு மலர்முக நலமிகு
பலகலை யிலகிய கலைமகள் போலவே (சிங்)

(2) கொஞ்சு கிஞ்சுக மொழிவிண்டு வங்காரக்
குறக்கூடை மாத்திரைக் கோலும் கொண்டுவருதல்கண்டு
நெஞ்சினில் மாமயல் மிஞ்சிய காமுகர்
கெஞ்சி யிதஞ்சொலும் ரஞ்சித வஞ்சி (சிங்)

(3) பாதச் சிலம்பொலிக்க யாவர்க்கு மிவள்
பகருங் குறியெலாம் பலிக்க இமயமலை
மாதொரு பாதியி லாதரவாய் மகிழ்
நாதர்தியாக விநோதர்நன் னாட்டில். (சிங்)

(கு - ரை) கிஞ்சுகமொழி - முள்ளு முருங்கைமலரைப் போன்ற வாயி லிருந்து வரும் சொல். காமுகர் - காமம் உற்றோர்.

## குறத்தி சொல்லுதல்

### சந்த விருத்தம்

24. அளிகுரல் பங்கய மெங்கு மிலங்கு
மனங்களி னங்கூடி
களிமயில் விந்தை நடம்பல கண்டு
களிப்புறு தென்னூர்
வளமுறு தியாகர் மகிழ்ந்துறை கோயிலின்
வாசல்வளங் கூறக்
குளிர்பெறு சந்தன குங்கும வாடைக்
குறமகள் வந்தனளே.

(கு - ரை) அனங்கள் இனம் - அன்னப் பறவைகளின் தொகுதி. வாடை - மணம்.

## வாசல்வளங் கூறல்

### இராகம் : சங்கராபரணம்

25. (1) மலர்மகளுங் கலைமகளும்
வளர்ந்தோங்கும் வாசலிது
சிலைமதவேள் சகசிராசன்
தினம்பணியும் வாசலிது (மலர்)
(2) வாசவனும் மாலயனும்
வணங்குமணி வாசலிது
நேசமுசு குந்தமன்னன்
நிதந்துதிக்கும் வாசலிது (மலர்)
(3) மறைநான்கும் கோபுரமாய்
வான்கிழிக்கும் வாசலிது
[29]நிறையாறு சாத்ரபுரா
ணங்கள்நிறை வாசலிது (மலர்)
(4) சைவநெறி யாகமங்கள்
தழைத்தோங்கும் வாசலிது
மெய்யுரைசெய் மூவர்தமிழ்
விளங்கநிற்கும் வாசலிது (மலர்)
(5) மதிகதிருந் தினந்தவழ்பொன்
மதிலோங்கும் வாசலிது

(பா-ம்.) 29. 'நிறைந்து வருஞ்'

துதிகொள்விட்ட வாசல்வளர்
தும்பிமுகன் வாசலிது
(6) சீர்பெறுசங் கீதவிசை
சிறந்ததென்றல் வாசலிது
வார்பெறுகுங் குமமுலையார்
வளர்நடஞ்செய் வாசலிது
(7) கனகசிங்கா தனக்கம்பிக்
காதழகர் வாசலிது
தினவசந்தத் தியாகேசர்
செம்பொன்மணி வாசலிது.

(கு - ரை) மாலும் அயனும்; அயன் - பிரமதேவன். மூவர் - திருஞான சம்பந்தர் முதலிய மூவர், கதிர் - சூரியன், விட்டவாசல் வளர்கணபதி : 2. தென்றல்வாசல் : 7. கம்பிக்காதழகர் : 7.

**கட்டளைக் கலிப்பா**

26. தெண்ணி லாமலர்க் கொன்றைமந் தாகினி
திகழுஞ் செஞ்சடைத் தியாகேசர்ச் சேருதற்
கெண்ணி மாமயல் கொண்டு புலம்பிய
ராச மோகினி யேயிந்த வீதியில்
வண்ண மேகலைத் தெய்வக் குறத்திதான்
வருதல் கண்டு வரவழைத் தேனுன்றன்
தண்ணந் தாமரைக் கைபார்ப்ப னுன்மனத்
தாபந் தீரத் தகுங்குறி சொல்வளே.

(கு - ரை) மந்தாகினி - கங்கை. மனத்தாபம் - மனத்திலுள்ள வருத்தம்.

**இராகம் : நாதநாமக்கிரியை**

**பல்லவி**

27. பேரு மூருமெங்கள் பிரபலமும் மோகினிப்
பெண்ணே சொல்லக்கேளாய்.

**அனுபல்லவி**

சீருலாவு செல்வத்தென் கமலாபுரித்
தியாகர் நன்னாட்டில் வந்ததேன் மொழியே.
(பேருமூரு)

**சரணம்**

(1) மூணு லோகச்சேதி மூணு காலச்சேதி
மூவர் தேவர் சேதி முதலாகத்
தோணுங் கேட்டபேர்க்குச்
சொல்ல வலதுமுண்டு
சுதசித்தமாய் வந்ததொழி லிதுகாண் (பேருமூரு)

(2) புவியிலுள்ள தேசம் புவியில் புண்ணியதலம்
புவியிலுள்ளமலை புதுமையெல்லாம்
செவியிற் கேட்டதல்லால்
திரிந்து கண்டுவந்தோம்
தெய்வலோகக் குறவஞ்சி கண்டாய் (பேருமூரு)

(3) கைக்குறியே கண்டு மெய்க்குறியே சொல்வோம்
கற்பனைக்குறி நாங்கள் கற்பதில்லை
பொய்க்குறி சொல்வது
பூனைக்குறச் சாதிதான்
புனிதத் தியாகர்நாட்டிற் பூமியிலே. (பேருமூரு)

(கு - ரை) பிரபலம் - மேன்மை, மூணு-மூன்று என்பதன் மரூஉ, சேதி - செய்தி. தோணும் - தோன்றும். வலது - திறமை. சுதசித்தமாய் - ஸ்வத சித்தமாய். பூனைக்குறச்சாதி - குறவருள் இழிந்த வகையார்; 29.

**விருத்தம்**

28. பங்கயத் தடங்கள் தோறும்
பரவிவண் டினங்கள் பாடச்
செங்கயல் குதிக்கு மாரூர்த்
தியாகநா யகர்நன் னாட்டில்
பொங்கமா மூரும் பேரும்
புகழுநான் தெரியச் சொன்ன
மங்கையே யுங்கள் சாதி
வழக்கமே துரைசெய் வாயே.

(கு - ரை) பொங்கம் - பொலிவு ; வழக்கு ; 35.

**இராகம் : பைரவி**

**பல்லவி**

29. சாதிமுறைமை கேளம்மே—குறச்
சாதிமுறைமை கேளம்மே.

அனுபல்லவி

வீதி விடங்கர் தேவர் தேவரகண்ட
விமலர் கமலைத்தியாகர் வெற்பினில் மானே.

சரணம்

(1) [30]புவனக் குறவர்பூனை பொசிக்கை யால்விடுத்தோம்
பொருப்பினில் குறவரினம் பொருந்தாமல் தடுத்தோம்
சிவனூர்குலமும் நல்ல திலதமென் றடுத்தோம்
செவ்வேளுக்கு வள்ளியைச்சிறப்பாகக்கொடுத்தோம்
(சாதி)

(2) மங்கிலியமெங்கள் சங்கின் மணிதன்னில் பதிப்போம்
வருங்கர்ரி யங்களெல்லாம் வாக்கினால் விதிப்போம்
துங்கவேலவர் செம்பொன் துணைப் பதந் துதிப்போம்
தோகைவள்ளி பெருமையைச் சொல்லிமதிப்போம்
(சாதி)

(3) செந்தேனுந் தினைமாவுந் தினமுண்டு களிப்போம்
சிலைகொண்டு கலையெய்யச் செடியி னடியொளிப்போம்
சந்தனச் செழுஞ்சுனைத் தடங்களிற் குளிப்போம்
தவளத் தரளம்வாரித் தளர்ந்தவர்க் களிப்போம்
(சாதி)

(4) வரைத்தன மானேயுன் றன் மதிமுகங்கண்டு
மகிழ்ந்துசொல்வேன் கேளென்றன் வார்த்தையுங்கொண்டு
துரைத் தியாகராசர் நாட்டிலெங்கள் தொழிலெலாம்விண்டு
சொன்ன தல்லாமலின்னஞ் சொல்ல வேணதுண்டு.
(சாதி)

(கு - ரை) பூனை தின்பது இழிவென்பது கருத்து. திலதம் - மேலாதல். கலை - ஆண்மான். தரளம் - முத்து. வரைத்தனம் - மலையைப்போன்ற நகில். வேணது - வேண்டியது.

## தரவு கொச்சகக் கலிப்பா

30. சோதிமதி வந்துலவுஞ் சோலைவளர் தென்னாரூர்
வீதி [31]விடங் கேசரருண் மேவுதமிழ் நன்னாட்டில்
சாதிவளஞ் சொன்னகுறச் சாதிமட மானனையாய்
சேதிபெற நீயறிந்த தேசமெல்லாஞ் சொல்வாயே.

(பி-ம்.) 30. 'புவரைக் குளுவர்' 31. 'விடங்க்த்யாகர்'

**இராகம் : மோகனம்**

**பல்லவி**

**31.** சிந்துர வாணுதல் மானே மன்னர்
தேசமெல்லாஞ் சொல்லுவேனே.

**அனுபல்லவி**

நந்துலவும் பழனந் திகழாரூர்
நாதர் தியாக விநோதர் நன்னாட்டில். (சிந்து)

(1) கொங்கங் கலிங்கங் குலிங்கங் கலியாணம்
கொந்தள லாட விராட கர்னாடம்
வங்கம் தெலுங்கம் மதங்கம் விதர்ப்பம்
மாளுவஞ் சாளுவ மக்கா மலாக்காய் (சிந்து)

(2) கொச்சி யுச்சினங் குடாரங் கடாரம்
கோசலம் கேரளங் கொல்லம் புளிந்தம்
மச்ச மராடம் திரிகூட மகேந்திரகூடம்
மாகத கேகய மந்திரந் துளுவம் (சிந்து)

(3) சீனந் துவாரகா சிந்து விதேகம்
சிங்கள வங்கள டெங்கண தேசம்
சோனக பல்லவ சாவக தேசம்
சூரசேனந் துலுக் காண மிதெல்லாம் (சிந்து)

(4) கண்ட தேச மின்ன முண்டொருகோடி
கமலைத் தியாகர் நாட்டிற் கனிமொழியேகேள்
மண்டலாதிபதி சகசிராசேந்திரன்
வாழுஞ் சோளதேச வளம் பார்க்கவந்தேன்.
(சிந்து)

(கு - ரை) நந்து - சங்கு. உச்சினம் - உச்சயினி.

## விருத்தம்

**32.** அடியரா னவர்கட் கெல்லாம்
அருள்புரி தியாகர் நாட்டில்
கொடியைநேர் மருங்குற் செவ்வாய்க்
கோதையே குறத்தி மாதே
படியினோர் மன்னர் தேசம்
பகர்ந்தனை படிமேல் வாழும்

நெடியமால் வரைகளெல்லாம்
நீயெனக் குரைசெய் வாயே.

(கு - ரை) படியில் - பூமியில். நேர்மன்னர் - நட்புக்கொண்ட அரசர்.

பல்லவி

33. நானறிந்த [32]மலைகளெல்லாம் நவிலக்கேளம்மே.

அனுபல்லவி

தேனிறைந்த செங்காவி
திகழ்தியாகர் நாட்டில். (நா)

சரணம்

(1) கனகமக மேருகிரி கருடாத்திரி கைலைமலை
கந்தமாதன மிந்திர சயனம்
பனககிரி பவளகிரி பலபத்திர கிரிதேவ
பாலகிரியுட னிந்திர நீல கிரியறிவேன் (நா)

(2) சந்த்ரகிரி விந்த்யகிரி சதுரகிரி வேதகிரி
சதகே சவாசல மகேந்திரம்
மந்தராசலஞ் சுராசலஞ் சுதாசல மேக
மல்லிகாசல மாலியவந்தம் நானறிவேன் (நா)

(3) மலையகிரி பத்மகிரி மணிகூடகிரி சக்ர
வாளகிரி முதலாய மலைகள்
உலகின்னம் பலகோடியுண்டு நானறிந்தமலை
உனக்குரைத்தேன் தியாகராரூர்வரையில் மடமானே.
(நானறிந்)

(கு - ரை) பனககிரி - பன்னக கிரி; பன்னகம் - பாம்பு; திருவேங்கடம். இந்திர நீலகிரி - தேவாரம்பெற்ற வடநாட்டுப் பதிகளுள் ஒன்று. மல்லிகாசலம் - ஸ்ரீசைலம். மலையகிரி - பொதியில்மலை. பத்மகிரி - திண்டுக்கல்.

(பி-ம்.) 32. 'மலைகள் சொல்வே னம்மே'

விருத்தம்

34. அலைவளம் பொருந்துந் தெண்ணீ
ராழிசூ ழுலகில் மேருச்
சிலைவளம் பொருந்துஞ் செங்கைத்
தியாகநா யகர்நன் னாட்டில்

கலைவளம் பொருந்தும் மானே
காசினி மீதி லுள்ள
மலைவள மின்ன தென்றே
வரிசையா யுரைசெய்வாயே.

பல்லவி

35. எங்கள் மலைவளஞ் சொல்வேனம்மே
எங்கள் மலைவளஞ் சொல்வேன்.

அனுபல்லவி

எங்கள்மலை வளங்களின்ன வகையென்று சொல்வேன்
பொங்குபுகழ்த் தென்கமலைப் புனிதத் தியாகேசர்நாட்டில்.
(எங்கள்)

(1) குங்குமப்பூ வரிதாரம் கோதிலி லவங்கம் காரம்
கூறுமகில் தேவதாரம் குளிருஞ் சந்தனம் கற்பூரம்
எங்கும் பதுமராகம் மாணிக்கந் திரளம்
எங்கும் ஐந்தலை நாகம் முனிவரிட்டம்
தங்குமட் டாங்கயோகம் மலையருவிச்
சங்கங்க ளுண்டனேகம் - விநோதமாக
கொங்கலர் துலங்குங் கொடியேலம்-வனங்கள்தொறும்
பொங்கமாய் விளங்கிடு நற்கோலம் - வகைவகையாய்
எங்களுக் கிசைந்த கந்தமூலம் - பகலிரவும்
வெங்கதிரெறிக்கு மிந்திர நீலம் - வெறிகமழும்
துங்கமலர்ப் பாரிசாதம் தும்புரு நாரதர்கீதம்
சொற்கலை யந்தணர்வேதம் துந்துமி நாதவிநோதம்
செங்கனக மேடைதொறும் திங்கள்வந் துலாவுமே.
(எங்கள்மலை)

(2) தந்தவக்ர யாளிசிங்கம் சந்திர சேகரவிடங்கம்
தவளவாரண துரங்கம் தடமெலாம் கொழிக்கும்சங்கம்
செந்தேன் பொழியுஞ்சோலை பசித்து
நொந்து வந்தோர்க்கு அன்னசாலை
சுரரமுதம் பைந்தேறல் பொங்கும்வேலை
அரம்பையருடன் கெந்தருவர் செய்யும்லீலை
கொண்டல்படிந்து சந்த தம்பொழியும் செம்பொன்வாரி
நவ மணிகள்பந்து போலெறியும் தரங்கவாரி
கரைகள்தொறும்
விந்தை விந்தையான வேடச்சேரி-மாதருக்கெல்லாம்

சுந்தரக் கொங்கைக் கணிகஸ்தூரி - சயனமெத்தைக்
கந்தமாகு மன்னத்தூவி - ஆருயிர் தருஞ்சஞ்சீவி
ஆடகக்கமலவாவிக்கமைந்த லக்ஷ்மிதேவி
இந்திரன் பொன்னுடுமிதற் கீடுசொல்லக் கூடுமோ.
(எங்கள்மலை)

(3) கன்னல்பைங் கதலிமாவும் காமரு கற்பகக்காவும்
கந்தமா மலர்கள் தூவும் காமன்வரக் குயில்கூவும்
புன்னை செண்பகம்பூகம் நிழல்விடாது
துன்னிப் படரசோகம் - அதில்
மந்த வன்னச் சிறுவெண் காகம்
வன்னக் கனிகள் தின்னத்திரியும் மயூரம்-வயல்கள் [தொறும்
செந்நெற்கதிர் செந்தினையின் காடு சிறந்திருக்கும்
பொன்மெழுகு கொம்பரக்கின் கூடு-புதுமையான
சொர்ன வாயான்மின்னு மன்னச்சோடு-அதிசயங்கள்
இன்னமுண்டு எங்கள் மலைநாடு-சுந்தரர்சொன்ன
பன்னுதமிழ்க் கொருதூதர் பைம்பொற் கம்பிக்காதர்
பங்குனி உத்திரபாதர் பார்புகழ் தியாகவினோதர்
தென்னுலவுந்தென்கமலைத் திருநாட்டில்கோதையே.
(எங்கள்மலை)

(கு - ரை) கந்தமூலம் - கிழங்கும் வேரும். தந்தவக்ரயாளி - வளைந்த பல்லையுடைய யாளி. விடங்கம் - பேரழகு. சயனம் - படுக்கை. அந்தம் - அழகு. சோடு - இரண்டு. பங்குனியுத்தரபாதர்: "உத்தர பாதந் திருவாரூர்" (தனிப்); "பாவித்தோர் கிண்கிணிக்கால் பங்குனி யுத்தரத்தே, சேவித்தோர் முத்தித் திருநாளில்" (திருவாரூருலா, 35.)

சந்த விருத்தம்

36. துதிபெறு முத்தமி ழுக்கர சாகிய
சுந்தரர் புகழாரூர்ப்
பதிவளர் வித்தக நிர்த்தத் தியாகர்
பதம்பணி குறமாதே
அதிசய முற்றம லைக்குள் வளப்பம்
அனைத்து முரைத்ததுபோல்
நதிகளின் மிக்க மகத்துவ மாரு
நதித்திரள் சொல்வாயே.

பல்லவி

37. *பூவுலகில் நதிகளெல்லாம் புகலக்கேளம்மே.

அநுபல்லவி

நாவலோர் புகழ்கமலை நாயகத் தியாகராசர் நாட்டி
(பூவுல)

சரணம்

(1) கவுதமி பாகீரதி கெண்டகி தீர்த்தவதி
கௌமோதகி பிரபல கபில மாநதியும்
பவநாச நீர் பஞ்சவடி தீர்த்தமுடன்
அவனிகா ளிந்திநதி அறிவேனடி யம்மே. (பூ)

(2) சிந்துநதி யுபயநதி சிறந்தகவுரி சந்த்ரபாகை
விரசை சரயு நதியுடனே
மந்தாகினி நர்மதை மணிகர்ணி வேகவதி
நந்தினி துங்கபத்திரை நதியுநா னறிவேனம்மே.
(பூவுலக)

(3) பதுமநதி சங்கநதி பம்பைநதி கம்பைநதி
புதுமை யான்கண்ட புண்ணிய நதியுடனே
இதல்லாம லின்னமுண்டு புவிமீதில்
அதிசயம் போற்றிய தியாகர் நாட்டில். (பூவுலக)

(கு - ரை) பாகீரதி - கங்கை. காளிந்தி - யமுனை.

38. தண்ணிலாத் தவழ்கொன்றைச் சடாடவியார் சாந்தணியும்
கண்ணுதலார் தியாகேசர் கமலைவளர் நன்னாட்டில்
மண்ணுலகோர் போற்றவரு மாநதிகள் சொன்னதுபோல்
ஒண்ணுதலே தெய்வதல முள்ளவெல்லாம் சொல்
[வாயே.

பல்லவி

39. சுரர்வணங்கு தெய்வ[33]தலத் தொகையுரைப்பே னுனே
சுருதிபுகழ் தியாகேசர் துய்யவரை மானே.

(பி-ம்.) 33. 'தலம்தொகுத் துரைப்பே னிப்போ'

---

* இரண்டாம் சரணத்துக்குப்பின் கீழ்வருமாறு ஒரு பிரதியில் காணப்படுகிறது.

" அமுதவதி ரூபவதி அருண்டுகிக மலை
சரசுவதியுங் கண்டேனடி யம்மே—(பூவுலகத்)

**சரணம்**

(1) வர்ணபுரி கேதாரம் வாஞ்சிபுரி காசி
வருணபுரி யருணபுரி மதுராபுரி சேது
சொர்ணபுரி இந்திரபுரி துளசிவனம் குமரி
சோணபுரி நீலபுரி சுவேதபுரியறிவேன். (சுரர்)

(2) தர்மபுரி சேஷபுரி சவுரிதரு கருந்தம்
சக்கிரபுரி செகநாதம் தெசரதனு ரயோத்தி
பிர்மபுரி யவுணபுரி பெருகு கொல்லா புரியும்
பெதரிவன முடன்கனக பிரபலபுரி யறிவேன்.
(சுரர்)

(3) கடனுகம் சிந்துமுகில் கருதுகுரு க்ஷேத்திரம்
கதலிவனம் சென்னிமலை கடவுள்சுப்ர மணியம்
வடதாரூர் தேவ்வனம் மதுரைகழுக் குன்றம்
வண்டுவரை தென்னரங்கம் வடமதுரை
யறிவேன். (சுரர்)

(4) அவநாசி தென்காசி அழகர் திருக்கோயில்
ஆடுதுறை பூந்துருத்தி அரிய திருக்கோலம்
பவநாசங் கதிர்காமம் பரவு முதுகுன்றம்
பஞ்சநதம் திருப்பழனம் பழனி மலையறிவேன்.
(சுரர்)

(5) திருப்புகலூர் திருநாகை திருக்குருகூர் சேறை
திருக்குடந்தை திருப்புவணம் திருவனந்தசயனம்
திருக்கடவூர் திருக்குவளை திருமருகல் பதியும்
திருக்குளம்பூர் முதலான தெரிசனம் செய்தேன்.
(சுரர்)

(6) காரணமாம் தேவருக்குக் கருதிய மாதவர்க்குக்
கதிகொடுக்கும் ஸ்தலங்களின்னம் கணக்குரைக்கப் போமோ
தேரணியு மதிலணியுஞ் சிறந்த திருவாரூர்
தியாகர்பதம் சேவைசெய்யத் தேடிவந்தே னம்மே.
(சுரர்)

**(கு - ரை)** துய்ய - தூய. பெதரிவனம் - பதரிகாச்சிரமம், துவரை-துவாரகை. பஞ்சநதம் - திருவையாறு. திருக்குவளை - திருக்கோளிலி, தேரணி - தேரழகு: 'திருவாரூர்த் தேரழகு' என்பது பழமொழி; "ஓட்டிய, தேரழகோ வீதித் தெருவழகோ" (திருவாரூருலா, 158-9.)

## கட்டளைக் கலிப்பா

40. கரிய மேதி திருக்காவி யம்பொய்கை
கலக்க வாளை கயல்விட்டு விண்மிசைத்
திரியு மீனினத் தோடுற வாய்மழைத்
திவலை யோடு திரும்பி யுலாவுநீர்
பெருகு வாவி கமலால யப்பிரான்
ப்ரசன்ன மால்வரைப் பெண்ணர சேயினி
அரிய மாதலம் சொன்னது போலவே
அண்ட கோள நிதானமும் சொல்வையே.

(கு - ரை) மேதி - எருமை. காவியம் பொய்கை - செங்கழுநீரோடை. விட்டு - பொய்கையைவிட்டு. மீன் - நட்சத்திரம். கமலாலயம் : ஒரு தீர்த்தம்.

## தாழிசைகள்

41. (1) நீங்காத மாயையுட னிலைமைபெற்ற மகத்துவமும்
ஆங்கார முடன்மூன்று மடைந்துநிற்கு மண்டமொன்று
(2) அண்ட முகட்டினில் பிரமராதி சத்திய லோகமுண்டு
புண்டரிக னுலகுக்கப்பால் பொருந்தியதோர் மகலோகம்
(3) தவலோகம் சனலோகம் தழைத்தசுவ லோகமுடன்
புவலோக முதலாகப் புங்கவரே மூலகுகண்டாய்
(4) மதிகதிர்கள் புயல்விளங்கு மண்டலங்கள் வேறுமுண்டு
துதிபெறு மானிடர்வாழுந் தொல்புவி மண்டலமிதற்குள்
(5) நலமிகு நாவலந்தீவு நவகண்ட வுருவாகும்
குலவுசெம்பொன் மேருவொன்று குவலயத்தின் நடுவில்நிற்கும்
(6) எண்டிசை பாலகர்திசையில் இருநான்கு வரைகள்நிற்கும்
அண்டர்பணி பொன்வரையை அடுத்ததரு நாலுமுண்டு
(7) சிந்தைமகிழத் தருவைச்சுற்றிச் சிறந்திருக்குந் தேவவண்டர்
இந்தநெடுந் தீவுடனே யேழுபெருந் தீவுமுண்டு
(8) தீவுகளைச் சூழ்ந்திருக்கும் திரைக்கடலோ ரேழுமுண்டு
தாவுதிரைக் கடலேழும் சகரர்களால் வந்தனகாண்
(9) ஏழுகடற்குமப் புறத்தேயிலகு செம்பொன் னிலமுமுண்டு
அழகுசெம்பொன் புவிக்குமப்பால் ஆழிநெடு மால்வரைகாண்
(10) பரவுசக்கர வாளந்தன்னைப் பற்றியிருள் மூடிநிற்கும்
திரமாகும் இருட்கப்பால் செய்யபெரும் புறக்கடல்சூழும்
(11) உயர்கடல்சூழ் புவியகலம் யோசனை ஐம்பதுகோடி
இயல்மிகுந்த கீழுலக மேழின் துறுதி சொல்வேன்

(12) அதலதலந் தனைத்தாங்கும் அஷ்டமா கசங்கள்நிற்கும்
மதகெசங்கள் தமைப்பரித்து வளர்ப்பா ராடகமூர்த்தி

(13) ஆடகரைத் தரித்துநிற்ப ரருள்முனிகூர் மாண்டர்கண்டாய்
சூடியகூர் மாண்டர்தமைச் சுமப்பது காலாக்னிருத்ரன்

(14) காலாக்னிருத்ரன் மெய்க் கனம்பொறுக்கச் சேடனுண்டு
மேலாதி சேடனுடன் மெய்தாங்கு மாமையொன்று

(15) அப்பெரிய வாமையொன்று மானபதி னுலுலகம்
செப்பமுடன் தாங்குதற்குத் திவ்வியவஸ்து ஒருவனுண்டு

(16) அவ்வொருவன் றிருவருளால் அண்ட மனேகங்களுண்டு
நவமான அண்டமொன்றின் நடத்தையைநான் தொகுத்துரைத்
[தேன்

(17) தோடுலவுந் திருச்செவியார் சுந்தரர்செந் தமிழ்க்கவியார்
ஆடரவக் கிண்கிணிக்கால் ஐயர்வரை மாமயிலே.

(கு - ரை) நவகண்டம் - ஒன்பது கண்டம், இருநான்குவரை - அஷ்ட குலாசலம். ஆழிநெடுமால்வரை - சக்கரவாளகிரி. ஆடகமூர்த்தி - ஆடகேசர், கூர்மாண்டர் - கூஷ்மாண்டர். "பாரிடப் படையுடைக் கூர்மாண் டர்" (திருவிளை. திருமணப். 82.)

## விருத்தம்.

42. கலிசெலா நகர மென்றுங்
கந்தமா புரியி தென்றும்
தலமெலாம் புகழு மாரூர்
தழைத்ததியா கேசர் நாட்டில்
குலவுமோ ரண்ட கோளக்
குறிப்பெலா முரைத்த மாதே
உலகில்நீ யறிந்த வித்தை
உசிதமா யுரைசெய் வாயே.

(கு - ரை) கலிசெலா நகரம் - திருவாரூரின் திருநாமங்களுள் ஒன்று, உசிதமாய் - பொருத்தமாய்.

## (தரு)

43. (1) அஞ்சன மோகன [34] தம்பவுச் சாடனம்
அறிவேன் காணம்மே
அக்கினிக் குள்சில தாமரைப் புஷ்பமுண்
டாகச் செய்வேன் காணம்மே

(பி - ம்) 34. 'தீபவுச்'

கஞ்ச மலர்ச்செங் கையில் வைகுந்தம்
காணச் செய்வேன் காணம்மே
காரிள மேகத்தைக் கையில் பிடித்தொரு
கன்னிகை யாக்குவேன் காணம்மே.

(2) அஷ்ட கசத்தையோர் கையினில் அம்மானை
ஆடி வருவேன் காணம்மே
அச்சமில் லாமல்விண் பச்சை வில்லைப்பிடித்
தம்பு தொடுப்பேன் காணம்மே
பட்டப் பகலை யிரவு இரவு
பகலாகச் செய்வேன் காணம்மே
பச்சிலை மூலிகை யாலுயர் மேருவைப்
பந்தெடுத் தாடுவேன் காணம்மே.

(3) மோது மெழுகடல் நீரைக் கடுகினில்
மூடி யடைப்பேன் காணம்மே
மோகன வேலவர் வாகன மேறியென்
முன்வரச் செய்வேன் காணம்மே
மாதர் வசீகர மந்த்ர வாதரச
வாத மறிவேன் காணம்மே
மன்னர் வசீகர மகேந்திர சாலமிகு
மாய மறிவேன் காணம்மே.

(4) ஊமைகள் பேச மலடிகள் கர்ப்ப
முண்டாகச் செய்வேன் காணம்மே
ஓதிய மாதவத்தோர் செய்யு மஷ்டாங்க
யோக மறிவேன் காணம்மே
பூமியில் மிக்க புரந்தர ஜால
புராண மறிவேன் காணம்மே
பூசலனங்கனு மாசை கொள்ளச் சிறு
பிள்ளை களாக்குவேன் காணம்மே.

(5) சித்துவித்தை மாயசித்தி யுடன்காய
சித்தி யறிவேன் காணம்மே
தேவர்சிங் காசனத் தியாகர் மருவிய
செந்தமிழ் சேரும் நன்னுட்டில்
சுத்தவித்தை கெஜகர்ணம் கோகர்ணம்
சோதிரிய மறிவேன் காணம்மே

சுந்தர வேலவர்தந்த வித்தையின்னம்
சொல்லத் தொலையா தம்மே.

(கு - ரை) மோகனம் - ஒருவகை வித்தை; "திடமுளமோகனமாட" (தனிப்) பச்சைவில் - இந்திரவில். வசீகரம் - வசப்படுத்துதல், பூசல் அனங்கன் - போரைச்செய்யும் மன்மதன். சோதிரியம் - சோதிடம்; வழக்கு.

## தரவு கொச்சகக் கலிப்பா

44. செய்யுலவுஞ்சேலுகளுந்தென்னாரூர்த்தியாகர்வெற்பில்
துய்யகுறி நீயுரைத்துத்தொல்லுலகில் கீர்த்திபெற்ற
தையலர்கள் பேருமவர் தந்தபூ ஷணமுநீ
மையுலவும் காரளக மாமயிலே சொல்வாயே.

(கு - ரை) மை - கருமை. காரளகம் - மேகத்தைப்போன்ற கூந்தல்.

45. (1) வாணிக்கே யிந்தி ராணிக்கே திரி
வேணிக்கே குறிசொன்னேன் - நல்ல
வாணிப்பொன் செம்பொன் வச்சிர
மாணிக்கங்கள் பல தந்தாள்.

(2) பூமிக்கே சத்திய பாமைக்கே வள்ளி
மாமிக்கே குறிசொன்னேன் - முலைக்
கேமக் கச்சுமுத்துத் தாமக் குச்சுமிரு
நாமக்குச் சிவியும் தந்தார்.

(3) பைம்பொற் கலிங்கத்துக் கும்பக் கொங்கையர்க்கு
நம்பிக்கையாய்க் குறிசொன்னேன் - வெள்ளைத்
தும்பிக் கோடு மிருசெம் பொற்றோடும்
சிலம்புச் சோடுமவர் தந்தார்.

(4) கொங்கிற் குடகுமன்னர் மங்கைப் பருவமாதர்
தங்கட் கரியகுறி சொன்னேன்
செம்பொற் பதமுன் கைச்சீராவும்
முன்கைக் கடகம் ரெண்டும்தந்தாள்.

(5) தேவலோகம் வாழும் மேனகை ரம்பைக்குப்
பாவனை யால்குறி சொன்னேன்
நாவலோர் புகழும் நவரெத்தின மாலையு
மதாணி முன்கைக் கிடவுமவள் தந்தாள்.

(6) தோகைபாக ரெங்கள் தியாகர் நாட்டில்குறி
சொன்னேன் மாதர் மன்னர்மார்அண்டர்
லோகமாதர்கள் நாகலோக மாதர்களின்னம்
அனேக [35]மாதருண்டு மானே.

(கு - ரை) வள்ளிமாமி - உமாதேவியார். ஏமம் - இன்பம். குச்சிலி-நெற்றிப்பொட்டு. சிலம்புச்சோடு - இரண்டு சிலம்பு. மதாணி - பதக்கம்.

சந்த விருத்தம்

46. (1) [36]துளவணி மாயன் வேதன் முனிவர்கள் வானுளோர்கள்
துதிபெறு தியாக ராச ரவர்மீதே
குளிர்பெறும் வாசல் மேவு தனகிரி மாதர் கேள்வி
குறிபிச காம லோதும் மங்கைபோல்
உளமகிழ் வாக நீயென் [37]நினைவி லுலாவுசேதி
உறுசொ லுலிங் நேரம் ஒருகோடி
வளர்கன காபி ஷேகம் பலமணி பூஷணுதி
வரிசைசெய் வேணு லாச மடமானே.

(கு - ரை) மாயன் - திருமால். வேதன் - பிரமதேவன். வரிசை - சிறப்பு.

பல்லவி

47. சொல்லும்குறி பொய்யாதே சொற்படி செய்வாயே.

அனுபல்லவி

அல்லியங்கோதை பங்காளர்
ஆரூர் வெற்பினில் மானே. (சொல்)

(1) சித்திரச் செம்பொன் மேடைமீதில்
செம்பவளக் கால்நிறுத்திக்
கொத்துமுத்துப் பந்தலிட்டுக் கோலமிட்டு
பத்தியாய்நடுவிலொரு பைம்பொன்னுல் கும்பம்வைத்து
சுற்றுநவ மணியாலே தோரணம் சிங்காரம் செய்து
குத்துச் சரங்களிட்டுக் குளிரும் பன்னீர் தெளித்து
இந்த்ர நீலப் பலகைமேல் இன்பமாகவே
தந்தி முகனையமைத்துச் சாம்பிராணி தூபமிட்டுக்
கந்த கஸ்தூரி நிறைத்துக் கற்பூர தீபமும் வைத்து
(சொல்)

(பி - ம்) 35. 'மாதர்க்குள் நான் வரமானேன்' 36. 'அரவணை மாயன்' 37. 'நினைவிலுள சேதி'

(2) கொப்பரை யவல்மோதகம் கோதிலாப் பொரிவிளங்காய்
முப்பழுங் கற்கண்டு சீனிமுன்னே படைத்துச்
செப்பமுடன் வேலவர்க்குத் தேனுந்தினை மாவும்வைத்து
ஒப்பிலாதவள்ளி காதில்ஓலை முத்து மாலைவைத்து.
(சொல்)

(3) அன்னமே தேவதீர்த்த நீராடி வெண்ணீறணிந்து
சொர்ண வர்ணப் பட்டுடுத்திச் சீதரமாய்
சொன்னவிரு நாழிமுத்துச் செங்கையா லளந்துவைத்துச்
சன்னதிமுன் னேபடைத்துத் தயவாய்க்குறி கேளம்மே.
(சொல்லும்)

(கு - ரை) அல்லியங்கோதை - நீலோத்பலாம்பிகை. தேவதீர்த்தம் : ஒரு தீர்த்தம். திருவாரூருலா, 17.

## விருத்தம்

48. நன்னெறி விளங்கும் தியாக
நாயகர் கமலை நாட்டில்
பொன்னகர் மருவுந் தெய்வப்
பூங்குற மகளே நீதான்
சொன்னசொற் படிசெய் தேனுன்
தொல்குல தெய்வம் போற்றி
உன்னிய கருமந் தன்னை
ஒன்றொன்றாய்ச் சொல்லு வாயே.

## அகவல்

49. மதுரை மீனாட்சி மணிமந்திர சூட்சி
அதிகோர மாதங்கி அமுத ப்ரசங்கி
கரதல கபாலி கடின த்ரிசூலி
சுரலோக வாசி சுகமந்த காசி
(5) பர்வத வேதாளி பலபத்ர காளி
கெர்வித கௌமாரி கேச [38]சத்தமாரி
பரம கல்யாணி பங்கய வாணி
துரித நிவாரணி சுமுகப் பிறைவேணி
[39]மல்லிகா பரணசூரி மகிட சங்காரி
(10) எல்லம்மை போலே எக்கலா தேவி
கொல்லமா புரமமர் குறக்கூடைத் தாயே

பாதாள மக்மாயி பகவதி தாயே
பூதவாகன மூர்த்தி புவன சரித்திரி
சரவண பவனே சண்முகத் தவனே
வரதசுந் தரனே மயூரவா கனனே
தெய்வநா யகியே [40]சிந்துர முகியே
வள்ளிமா மயிலே மைவிழிக் குயிலே
கொந்தலர் குழலாள் கொவ்வைவா யிதழாள்
முத்தணி முலைப்பெண் மோகினி தனக்குக்
கைக்குறி பார்த்து மெய்க்குறி யுரைக்க
வந்துமுன் நிற்கத் தயவுசெய் வீரே.

(கு - ரை) மந்தகாசி - புன்சிரிப்புடையவள். துரிதம் - பாவம். சிந்துர முகி - யானை முகமுடையவள்.

(பி - ம்) 38. 'சமதாரி' 39. 'மல்லிகார்ச்சுன கௌரி' 40. 'சந்தோர்'

## சாமுத்திரிகாலட்சணம் கூறல்

50. தங்க ரேகையிது சக்ர ரேகையிது
சாமரை ரேகை யிதம்மே
தரும ரேகை சந்தான ரேகையிது
சௌபாக்ய ரேகை யிதம்மே
மங்கள ரேகை விமான ரேகைநர
வாகன ரேகை யிதம்மே
வாழ்வுதரு மச்ச கந்திகையிற் கண்ட
மகுட ரேகை யிதம்மே
கங்கை கையிற்கண்ட கும்பரேகையிது
காரணரேகை யிதம்மே
துய்ய சுபத்திரை மாதுகையிற் கண்ட
தோரண ரேகையிதம்மே
தோகை துரோபதை மாதுகையிற்கண்ட
சுந்தர ரேகையிதம்மே
பெருமையான மச்ச ரேகையினுல் எட்டுப்
பிள்ளைகள் நீ பெறுவாயே
பிரபலமான வச்சிர ரேகையினுலைந்து
பெண்கள் பெற்று மகிழ்வாயே
மருவும் சீதசந்த்ர ரேகையினுலுன்றன்
மங்கிலியம் வளர்வாயம்மே

[41]வளமுல்லாவு தனரேகையினுல்
மகராசியா யிருப்பாயம்மே
அந்தரேகை கும்ப ரேகையினுலொரு
அங்குசரேகை கண்டேனே
அங்குச ரேகையின் மீதினிலேயரி
யாசனரேகை கண்டேனே
இந்தரேகை வெகு விந்தைரேகை மையல்
தந்தரேகை யிதுதானே
இந்த்ரன் வேதன்நெடு மாலிவர் மூவர்க்கும்
இறைவர் மீதிலாசை கொண்டாயே.

(பி - ம்) 41. 'வனமுலேதன'

## கொச்சகக் கலிப்பா

51. பையரவக் கங்கணத்தார் பங்குனித்தியா கேசர்வெற்பில்
கையில்வரு நெல்லிக் கனிபோலத் தெரிந்திடவே
மையல்தந் தவனூரும் வரிசைத் திருப்பேரும்
அய்யனுடை மெய்யி னடையாளம் சொல்வாயே.

52. (1) ககனபகீ ரதிவிரியு மம்மே
கற்பகமா மலர்சொரியு மம்மே
திகழ்கனக நாடனடி யம்மே
செவ்வந்தித்தோ டழகனடி யம்மே

(2) கனக்வரைச் சிலேயனடி யம்மே
கைலாச மலேயனடி யம்மே
அனல்மருவுங் கண்ணனடி யம்மே
அந்திநிற வண்ணனடி யம்மே.

(3) விருதிடபக் கொடியனடி யம்மே
விளங்கியகைத் துடியனடி யம்மே
சுருதிமறை கடந்தவன்கா ணம்மே
தூதிரவில் நடந்தவன்கா ணம்மே.

(4) தேவசிங்கா சனபதிகா ணம்மே
தெளிந்தவர்சிந் தையில்நிதிகாணம்மே
மூவர்தமிழ்க் குகந்தவன்கா ணம்மே
மூப்பிளமை யிகந்தவன்கா ணம்மே.

(5) கங்கையினைச் சுமந்தவன்கா ணம்மே
கமலைநகர்க் கமர்ந்தவன்கா ணம்மே
பொங்கரவம் பூண்டவன்கா ணம்மே
புரமெரித்த வாண்டவன்கா ணம்மே.
(6) செங்கழுநீர்த் தொடையனடி யம்மே
திரிசூலப் படையனடி யம்மே
மங்கையொரு பாகனடி யம்மே
வன்மீகத் தியாகனடி யம்மே.
(7) பொருபுலித்தோ லுடுத்தவன்கா ணம்மே
உனக்குமயல் கொடுத்தவன்கா ணம்மே
மருமலர்த்தார் தருவனடி யம்மே
மகிழ்ந்தணைய வருவனடி யம்மே.

(கு - ரை) செவ்வந்தித் தோடழகன்: தியாகேசர் திருநாமம். மரு - வாசனை.

## கட்டளைக் கலிப்பா

53. ஒருவ ராலு மறியாவென் [42]னெஞ்சகத்
துண்மை யோது முயர்குற வஞ்சியே
பெருவ ராகமு மன்னமுந் தேடிய
பித்த னூர்கம லைப்பதி யத்தனூர்
மருவு லாவிய மாலைதந் தின்பமாய்
வாசம் வீசு மலரணை மீதிலே
இருவ ராகமு மொன்றுகச் சேருதற்
கெந்த நாளதை யிப்போது சொல் வையே.

(கு - ரை) வராகம் - திருமாலாகிய பன்றி. ஆகம் - உடம்பு.
(பி - ம்.) 42. 'நெஞ்சத் துண்மை'

45. பலபலெனக் [43]கவுளிசொல்லும் பல்லிகாதல் நல்லதுபார்
பருத்தமுலை மடந்தையே பகரக் கேளாய்
குலவு கருமுகி[44]லெழுந்து குதிகொண்ட கோடிபொன்பெறுமே
கோகனக முறத்தில்முத்துக் குறித்துப் பார்பெண்ணே.
ஒருத்தி உன்றன்மையல் தூதுபோ
யுரைத்துச் செங்கழுநீர் மாலைவாங்கி வந்தேனென்பாள்
திலதநுதல் பெண்ணரசே தியாகேச ரிப்பொழுதே
திருவருள்செய்து னையணைவார் திரமாக வாழ்ந்
[திருப்பாய்.

(கு - ரை) திரமாக = ஸ்திரமாக - நிலையாக.
(பி - ம்) 43. 'பல்லி சொல்லும்' 44. 'லேந்து கோடி'

விருத்தம்

55. இளநிலா வேணித் தியாக ரிடத்தில்மால் கொண்ட வென்றன்
உளவெலா மறிந்து சொன்ன வுச்சிதக் குறத்தி யாரே
அளவிலா நிதிகள் செம்பொன் னுடைபூ ஷணங்கள் நானே
வளமையா யருள்சாத் தங்க வரிசைநீ கைக்கொள் [வாயே.

(கு - ரை) உளவு - ரகசியம். உச்சிதம் - மேன்மை.

56. அம்பர வடிவ ராரூ ரம்பர த்யாகர் நாட்டில்
தம்புரு வீணை தொட்டுச் சங்குமா மணிகள் பூண்டு
கும்பமென் முலையா ராசைகொண்டுபின் தொடர்ந்துகீத
தும்புரு நார தர்தாம் துலங்கவே தோற்றி னரே.

(கு - ரை) அம்பரவடிவர் - ஆகாயமாகிய வடிவையுடையவர். "வேத மொழிவிசும்பு மேனி" (திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம், 2.) அம்பரத்யாகர் - அழகிய மேலான தியாகர்.

57. சந்த்ரகாவி யுடைதொட்டுச்
சரிகைக்கச் சையுங்கட்டி
சுந்தர மிலங்கு வச்ர
சுளிக்கிக்கோல் கையிற்கொண்டு
மந்தர புயத்தில் நவ
மணிப்பெட்டி தன்னைத் தூக்கிச்
சிந்துரத் திலத முகச்
சிங்கன்வந்து தோற்றினனே.

பல்லவி

58. சிங்கன் வந்தானே—ஒய்யாரக் குறச்
சிங்கன் வந்தானே.

அனுபல்லவி

சிங்கனும் வந்தா னிங்கித மாகவே
வங்கணத் தியாகர் விளங்கிய நாட்டில். (சிங்கன்)

சரணம்

(1) கொத்து மணித்திரள் முத்து வடத்தொடு
வைத்த பதக்க முகத்தி லிலங்க
மெத்தவு நீறுத ரித்துவி னோதமாய்க்
கைத்திரள் பேசிந கைத்திற மாகவே. (சிங்கன்)

(2) உறுக்கியே பேசி வெறிக்கவே விழித்து
முறுக்கியேமீசை தெறிக்கநடந்து சுகத்துக்கலவி
அறிக்கை மிகுந்த குறிக்கிதமான
செறுக்கியை நாடியே. (சிங்கன்)

(3) அக்கரவம்புனை செக்கர் நிறத்தவர்
முக்கணர் தியாகர் வரைக்குள் விநோதமாய்
மிக்கசொரூப மலர்க்கணை வேளென
வக்கணை பேசி யிலக்கணமாக. (சிங்கன்)

(கு - ரை) வக்கணம் - நட்பு. செறுக்கி : சிறுக்கியென்பதன் சிதைவு. அக்கு அரவம் புனை - சங்கு மணியையும் பாம்பையும் அணிந்த. செக்கர் - செவ்வானம்.

பல்லவி

59. காணேனே சிங்கிதன்னைக் காணேனே.

அநுபல்லவி

காணேனே யின்னமெங்கள் கமலைத்யாகர்நாட்டில்
வீணே தேடித்தேடி மெலிந்தலைந்தேனே. (காணேனே)

சரணம்

(1) மஞ்சள் பூசிநல்ல வாடையும் பூசி
வளமு லாவும்செம்பொன் வளைக்கரம் வீசி
கொஞ்சிப் பேசிவெகு ரஞ்சிப் பானவஞ்சி
நெஞ்சிற் காதல்கொண்டு மிஞ்சிப்போனாளோ. (காணேனே)

(2) மங்கை காதுவிழி வண்டுகாணைய்யே
மாரின் முலைகள்ரெண்டு மலர்ச்செண்டுகாணைய்யே
தங்கக் காறைமுத்துத் தொங்கல் தோடிலங்க
பொங்கக் காரியவ ளெங்கேபோனாளோ. (காணேனே)

(3) கோலச் சோலைக் குயில்கூவுந் தென்னாரூர்க்
குலவுந் தியாகராசர் குளிர்ந்த பொன்னாட்டில்
வாலக் கிள்ளைமொழி நீலக் கள்ளவிழி
சாலக் கள்ளியெங்கு தேடிப் போனாளோ. (காணேனே)

(கு - ரை) வாடை - வாசனை. ரஞ்சிப்பு - மகிழ்ச்சி. மார் : மார்பு என்பதன் விகாரம். பொங்கக்காரி - பொலிவுடையவள். சாலக்கள்ளி - மிக்க கள்ளத்தையுடையவள்.

விருத்தம்

60. சங்கங்கள் தவழும் தெண்ணீர்த்
தடமலர்க் கமலம் பூத்த
கொங்கெங்கு மகிழ்தென் னாரூர்க்
குரிசில்தியா கேசர் நாட்டில்

அங்கங்கள் வேர்வை பொங்க
அலேந்துநீ சிங்கி தன்னே
எங்கெங்குத் தேடி வந்தாய்
எனக்குநீ சொல்லு வாயே.

**பல்லவி**

61. தேடித்திரிந்தேனே—அய்யே யென்றன்
சிங்கியைக் காணேனே.

**அநுபல்லவி**

தேடித்திரிந்தேனே நாளும் தியாகேசர் தமிழ்நாட்டில்
நாடித் தனித்துவந்து நாலா தேசமும்சுற்றி. (தேடி)

**சரணம்**

(1) மச்சந் திரவிடஞ் சிந்துவிதேகம்
மக்கந் துளுவம் கர்நாடம்
கொச்சி குடகு கொல்லமல் லாபுரம்
யச்ச டில்லிமலே யாள தேசமெங்கும். (தேடி)

(2) சக்கர வாளகி ரிக்கு நடுவிலுள்ள
சத்தத் தீவு முதலாய்
மிக்க மேருவுக்கு மேற்கு முயர்கிழக்கு
தெற்கு வடக்கு அஷ்டதிக்கும் ஓடியாடி. (தேடி)

(3) கறுத்த கண்டச்சோதிக் கமலேத் தியாகர்நாட்டில்
வெறுத்து வந்தசிங்கி மேவியிருக்கு மிடம்
குறித்துச்சொன்னபேரைக் கும்பிடுவே னேயே. (தேடி)

**சந்த விருத்தம்**

62. சிலேயென மேரு வளேத்த தியாகர்
செழித்தருள் நன்னுட்டில்
பலகலே வித்தை யறிவின் மிகுத்தருள்
பண்புள சிங்காகேள்
மலர்முக மாதர் மன்னர் வசீகர
மருந்துகள் நீதந்தால்
நலமிகு சிங்கி யிருக்கு மிடந்தனே
நானுரை செய்வேனே.

**பல்லவி**

63. திரளாயதிசயம் நான்தருவே [45]னென்னுடைச்
சிங்கியைக் காட்டுமையே.

அநுபல்லவி

அரவபூஷணர் தென்னூரூர் மேவிய
அமலர்கமலைத் தியாகரணி வரைமீதே. (திர)

சரணம்

(1) மோகன ரசக்குளிகை தருவேன் நல்ல
மோகமா நரிக்கொம்பு தருவேனே
வாகுள்ள புழுகுசவ் வாதுகஸ் தூரியும்
வாடைப்பொடியும் வகைவகையாய்த் தருவேனே. (திர)

(2) அண்டர் சிரசில்வைக்கும் அமுதக் குளிகையொன்றும்
ஐராவதக் கொம்பும் தருவேனே
மண்டலம்புக ழிந்த்ர வனத்தில் கற்பகத்தரு
வளர்சிந்தா மணிமாலையும் தருவேனே. (திர)

(3) மால்கொண்டு மடந்தையர் தொடர்ந்திடவேமுக
வசீகரத் திலதமும் தருவேன்
சேல்கொண்ட விழியுமைபாகர் தென்கமலையில்
தேவசிம்மாசனத் தியாகர் நன்னாட்டில். (திர)

(கு - ரை) நரிக்கொம்பு - பிறரை வசப்படுத்தற்குரியதென்பது உலக வழக்கு; " அக்கன்னியர்கை, நரிக்கொம்பு தானுமுண் டோவேங் கடாசல நாயகனே " (தனிப்.) வாகு - அழகு.

(பி - ம்) 45. 'னென்னுடன்'

விருத்தம்

64. அந்தணர்வே தாந்தவடி வான மூர்த்தி
அந்திக்காப் பழகர்திரு வாரூர்த் தியாகர்
மந்தரமா வரைப்புயத்தி லணைய வேண்டி
மயல்கொண்டு மதிமயங்கிப் பசலை பூத்த
பந்துமுலை மோகினிக்கு வலக்கை பார்த்துப்
பண்புபெற குறியுரைத்துப் பரிசில் பெற்றுச்
சிந்தைமகிழ்ந் துணைத்தேடி யலைந்தே வந்தாள்
சீதசந்த்ர விம்பமுகச் சிங்கி தானே.

சிங்கன் சிங்கி சம்பாஷணை

65. (1) கற்பக நாடுவிட்டுக்
காசினிக்கு வந்ததென்ன—சிங்கி அடா
கமலைவரும் தியாகரைநான்
கண்டுசேவை செய்யவந்தேன்—சிங்கா

சற்பனையா யெனைப்பிரிந்து
தனிவழியே வரலாமோ—சிங்கி
தான்திருடர் பிறரைநம்பார்
தகைமையைப்போ லுரைத்தனையே—சிங்கா

(2) மானுப மானம்விட்டு
மயங்கியெவர் பின்தொடர்ந்தாய்—சிங்கி
மடியில்கன மில்லார்க்கு
வழியிற்பய மேதுக்கடா—சிங்கா
ஈனமில்லாக் குறச்சாதிக்
கிழுக்குன்னுல் வந்ததடி—சிங்கி
இல்லாதொரு வில்லங்கம்
ஏதுக்கென்மேல் போடுருய்—சிங்கா

(3) கொடியிடையே யுனதுகற்புக்
குலேந்ததென்ன காரணமோ—சிங்கி
குற்றமுள்ள நெஞ்சுனக்குக்
குறுகுறுப்பாய்த் தோணுமடா—சிங்கா
வடிமெழுகா யுருகுதடி
மார்க்கமெல்லாம் வீணுச்சே—சிங்கி
மனதெழுந்து என்னையிந்த
வாய்க்கிறுது பேசலாமோ—சிங்கா

(4) கைப்பிடித்த கணவனுக்குக்
கவடுசெய்ய லாகுமோடி—சிங்கி
கள்ளருடை மனதிலச்சம்
காடுகொள்ளா தெனவுரைத்தாய்—சிங்கா
பொய்க்குமொரு பொருளுரைக்கும்
புதுமைகண்டே னுன்னிடத்தில்—சிங்கி
புலிபசித்தா லென்னபுல்லைப்
பொசிப்பதுண்டோ நீசொல்லடா—சிங்கா

(5) குறித்துவந்த செயல்வேறே
குறிபார்க்க வந்ததல்லாற்—சிங்கி
கொங்கணவா வென்றகதை
கூறவும்நீ கேட்டிலையோ—சிங்கா

செறிக்கி மனதறியாமல்
செய்தூர்த்தன் கதையானேன்—சிங்கி
திருவுளமே யறியுமுன்மேல்
சிந்தையெனக் கென்பதுவும்—சிங்கா

(6) உன்றன் மனதறியாமல்
உரைத்ததெல்லாம் பொறுத்தருள்வாய்—சிங்கி
உபசாரம் போதுமுன்றன்
உறவும்நல்ல வுறவல்லடா—சிங்கா
என்றன்மையல் தணிந்திடவே
இரங்கியென்னை அணைந்திடுவாய்—சிங்கி
இரதியும் மன்மதனும்போலே
இருவருமாய் வாழ்ந்திருப்போம்—சிங்கா.

(கு - ரை) சற்பனை - வஞ்சனை. 'தான் திருடன் பிறரை நம்பான்' என்பது ஒரு பழமொழி. மானபமானம் - மானமும் அவமானமும். கவடு - கபடம்.

**விருத்தம்**

66. செந்திருமா யவன்வாழி யயனும் வாழி
தெய்வமுசு குந்தமன்னன் தினமும் வாழி
சுந்தரர்முத் தமிழ்வாழி கவிஞர் வாழி
தொண்டரறு பதின்மூவர் சுகித்து வாழி
சந்ததமும் தென்கமலைப் பதியும் வாழி
தவம்தானம் பரிகலமும் தழைத்து வாழி
மந்திரவே தியர்வாழி...............
.........................

(கு - ரை) பரிகலம் - பரிகரம்.

67. சீர்பெருகு நடுதறியார் தேவியுமை வாழி
திருமாலும் லெட்சுமியும் தினந்தினமும் வாழி
கார்வாழி நதிவாழி கற்றவர்கள் வாழி
கனதனங்கள் வளர்ந்திருக்கு மரசர்களும் வாழி
சேர்பெரிய மான்வாழி பதிகமிக வாழி
செட்டிபல பட்டடையுஞ் செந்தமிழோர் வாழி
ஏர்சிறந்த வேளாள ரெந்நாளும் வாழி
இந்திரன்போல் வாழ்ந்திருக்கும் யாவர்களும் வாழி.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

வித்துவான் சி. தியாகராஜ செட்டியாரவர்கள்
இயற்றிய

# திருவாரூர் மருந்து வெண்பாமாலை

---

## காப்பு

சீர்பூத்த வாரூர்த் தியாகேச னைத்துதிக்க
நார்பூத்த வின்சொ னனியருளும்—ஏர்பூத்த
ஐங்கரநால் வாய்முக்கண் ணூர்ந்தருளி யன்பர்க்கு
மங்களஞ்செய் தெய்வ மருந்து.

## சமயாசாரியர்

தீயபிணி தீர்க்குஞ் சிரபுரத்து வாழ்மருந்து
வாயரசென் னும்பேர்கொண் மாமருந்து—பாயவிழி
மாசகலப் பாடுநா வன்மருந்து மாணிக்க
வாசகப்பேர் பூண்ட மருந்து.

---

## நூல்

1 திங்களணி வேணித் தியாகேச னென்னும்பேர்
தங்கப் புனைந்த தனிமருந்து—துங்கத்
திருவந் தருமருந்து செய்யமறைச் சென்னி
மருவுமருந் தாரூர் மருந்து.

2 கொன்றை யணிந்த குணமருந்தன் பர்க்கென்று
நன்று மகிழ்ந்துபுரி நன்மருந்து—குன்றாத
காட்சியடி யேற்கருளுங் கண்மருந்து கல்வியான்
மாட்சிபெறு மாரூர் மருந்து.

3 மால்பிரமன் காணாத மாமருந்து தற்புகழும்
நூல்பலவாய்ந் தோர்பிறவி நோய்மருந்து—காலற்காய்ந்
தெள்ளுத லில்லா வெழின்மருந் தேற்றவர்க்கு
வள்ளலா மாரூர் மருந்து.

4 தேவர்க் கரிய திருமருந்து தென்றமிழால்
மூவர் பரவு முதன்மருந்து—காவார்
கரமருந்தென் கண்ணேய் கரக்குமருந் தென்றும்
வரமருந்தா மாரூர் மருந்து.

5 நீறு புனைந்த நிமலமருந் தோவாது
நாறுகுழல் பால்வைத்த நன்மருந்து—வேறுதுணை
இல்லாப் பெரிய வெழின்மருந்தெல் லாஞ்செய்ய
வல்லதா மாரூர் மருந்து.

6 மாலேற்றிற் காட்சிதரு மாமருந்து செங்கையில்
வேலேற்ற கான்முளையின் மெய்ம் மருந்து—காலேற்ற
சென்னியா ரேத்துந் திருமருந்தெல் லாநோய்க்கும்
வன்னியா மாரூர் மருந்து.

7 பெண்ணையிடப் பாற்கொள் பெருமருந்து தன்வயிற்றில்
மண்ணைவைத்த வேற்றில் வருமருந்து—கண்ணை
அகழ்ந்தவன்பர் கண்ட வருமருந்தெல் லோரும்
மகிழ்ந்துகொளு மாரூர் மருந்து.

8 ஆவணங் காட்டி யடிமை கொளுமருந்து
கோவணங்கள் ளத்திற் கொளுமருந்து—தாவாக்
கதியடியார்க் கீந்து களிக்கு மருந்து
மதிமுடித்த வாரூர் மருந்து.

9 அன்பர்துயர் காணு வருமருந்து தாள்பணியா
வன்பர்துயர் மாற்று மருந்துபே—ரின்பம்
பயக்குமருந் தோர்நால்வர் பாடுமருந் தென்னுள்
மயக்கறுத்த வாரூர் மருந்து.

10 வெள்ள முடித்தசடை மெய்ம்மருந்து நாயடியேன்
உள்ளப்பூங் கோயி லுறைமருந்து—கள்ளம்
இருவா வுளத்தார்க் கினிக்குமருந் தின்னல்
மருவாத வாரூர் மருந்து.

11 காமனைக் காய்ந்தநுதற் கண்மருந்து கூடலிலே
மாமனுய் வந்து வழக்குரைத்த—தேமருந்து

கன்னியோர் பாகங் கலந்தமருந் தங்கையிலே
வன்னிவைத்த வாரூர் மருந்து.

12 மான்மழு வங்கைமிசை வைத்த தனிமருந்து
தேனமர்பூங் கொன்றைத் திருமருந்து—கானமர்ந்த
வேட்டுவனு ரூட்டூன் மிசைந்தமருந் தென்பிறவி
வாட்டுமருந் தாரூர் மருந்து.

13 கந்தரத்து நீலங் கலந்தமருந் தின்கவிசொல்
சுந்தரர்க்குக் கண்ணோய் தொலைத்தமருந்—திந்துமுடி
ஆர்ந்தமருந் தம்பலத்தி லாடுமருந் தோயாது
வார்ந்தபுக ழாரூர் மருந்து.

14 கண்டக் கறைமருந்து கான்மலர்சேர் மாணிக்காத்
தண்டதரற் காய்ந்த தனிமருந்து—துண்டப்
பிறையணிந்த சென்னிப் பெருமருந்து தூய
மறைபுகழு மாரூர் மருந்து.

15 வெம்பணியிற் றுஞ்சும் விடைமருந்து மெய்யடியார்
நம்ப வருள்புரியு நன்மருந்து—கம்பக்
களிறுரித்த கைமருந்து காமன்றே ராய
வளிதவழு மாரூர் மருந்து.

16 அப்பர்குடர் நோய்தீர்த் தருண்மருந்து பாண்டியன்மெய்
வெப்பொடுகூ னுந்தீர்த்த மெய்ம்மருந்து—துப்பினையே
ஒத்த சடிலமருந் தும்பர் தொழுமருந்து
மத்தமுடி யாரூர் மருந்து.

17 என்பைப்பெண் ணுச்செ யெழின்மருந்து சுந்தரர்மெய்த்
துன்பைத் தவிர்த்தருளுந் தூயமருந்—தன்பை
இழவார் பிறப்பறுக்கு மின்மருந்திற் றேறு
மழவார்தென் னாரூர் மருந்து.

18 விண்மணியைக் கண்ணுக்கொண் மெய்ம்மருந்து நாயடியேன்
கண்மணிக்கு முன்னொளியைக் காட்டுமருந்—தெண்ணுமணி
கண்டனென வண்டர் கரைமருந்து சோலைதொறும்
வண்டமர்தென் னாரூர் மருந்து.

19 தாமரையோன் சென்னி தடிந்தமருந் தென்பிறவி
நாமலைய வோட்டு நலமருந்து—தேமலர்ந்த
பூவடியென் சென்னி பொருந்துமருந் தேகம்ப
மாவடிவா ழாரூர் மருந்து.

20 கண்சுமந்த நெற்றிக் கவின்மருந்து வந்திக்கா
மண்சுமந்து பிட்டுண்ட மாமருந்து—பண்சுமந்த
சாமம் பரவுந் தனிமருந்து வெற்பரசி
வாமஞ்சா ராரூர் மருந்து.

21 பாம்பும் புலியும் பணிமருந்து பாண்டியனை
வேம்பணிய ருங்கும் வியன்மருந்து—காம்பனைய
தோண்மா தொருபாகந் தோய்மருந்து கண்ணுய
வாண்மாத ராரூர் மருந்து.

22 இந்திரன் போற்று மெழின்மருந்தீ ரெண்கலைசேர்
சந்திரனைத் தேய்த்த தனிமருந்து—மந்திரமாம்
அஞ்செழுத்துள் வாருக் கருண்மருந்து வாழ்பவர்கள்
வஞ்சமகற் றுரூர் மருந்து.

23 தாரணிந்த கொன்றைச் சடைமருந்து வாமத்து
வாரணிந்த மென்முலையாள் வாழுமருந்—தேரணிந்த
வேதமுடி வைகும் வியன்மருந்து வென்றசீர்
மாதவர்வா ழாரூர் மருந்து.

24 பைவைத்த பாப்புப் பணிமருந்து பாணருக்காத்
தெய்வக் கவியெழுது சீர்மருந்து—நைவன்பர்க்
கெய்தப் பொருந்தா வியன்மருந்து கந்தரத்து
மைவைத்த வாரூர் மருந்து.

25 வேளைப் பொடித்த விழிமருந்து வெற்பெடுத்தான்
தோளை நெரித்த சுடர்மருந்து—தாளைப்
பரவுமடி யார்துன்பம் பாற்று மருந்து
வரமருளு மாரூர் மருந்து.

26 சூலப் படைசுமந்த தொன்மருந்து பாகத்தில்
ஏலக் குழலியம ரின்மருந்து—கோலத்
திருப்பதத்தின் மால்விழிசேர் சீர்மருந்து வன்றி
மருப்பணிந்த வாரூர் மருந்து.

27 உழுவை யுரியை யுடுத்த மருந்து
வழுவையுரி போர்த்த மருந்து—கழுவிற்
கொடியரை யேற்று குணமருந்து செந்தேன்
வடியிதழி யாரூர் மருந்து.

28 தேமா நிழலிற் சிறந்த திருமருந்து
பூமாது போற்றும் புகழ்மருந்து—கோமான்

முசுகுந்தன் கண்ட முதன்மருந்தங் கையில்
வசுவேந்து மாரூர் மருந்து.

29 கள்ளார்ந்த வாத்தியடி காத்தமருந் தன்பர்க்கு
வெள்ளானை யீந்த வியன்மருந்து—நள்ளார்
புரமெரித்த மூரற் புகழ்மருந்தி யாரும்
வரமுகக்கு மாரூர் மருந்து.

30 கற்றூர் புகழுங் கவின்மருந்து காழியர்க்குப்
பொற்றாளந் தந்த பொருவின்மருந்—தற்றூர்க்
கிருநிதியாய்க் காக்கு மியன்மருந்து சார்ந்தோர்
மருளகற்று மாரூர் மருந்து.

31 சேற்கொடியன் சூரலடி சேர்மருந்து புற்பறழைப்
பாற்கடல்கூ யுண்ணப் பணித்தமருந்—தேற்க
நுளையர்குலப் பெண்வேட்ட நோன்மருந்து கூடல்
வளையல்விற்ற வாரூர் மருந்து.

32 தேசம் புகழுந் திருமருந்து தேங்கொன்றை
வாசம் பொலிவேணி மாமருந்து—பாசம்
அகழடியா ருள்ளத் தமருமருந் தொற்றி
மகிழடிவா மூரூர் மருந்து.

33 மண்ணெடுவிண் கீண்டு வளர்மருந்து வான்கவிஞர்
எண்ணுஞ்செந் நாவிருக்கு மின்மருந்து—பண்ணே
டிசைபாடித் தெவ்வோட்டு மின்பமருந் தாரும்
வசைபாடா வாரூர் மருந்து.

34 சேந்தன் றவிட்டமுதுண் சீர்மருந்து பூஞ்செல்வி
காந்தனுக் காழிதந்த காமர்மருந்—தேந்து
கொடியில் விடைவைத்த கோமருந்து கற்போர்
மடியடையா வாரூர் மருந்து.

35 பெற்றமுவந் தேறும் பெரியமருந் தெக்கலையு
முற்றவுணர்ந் தோருணரு முன்மருந்து—நற்றவத்தோர்
சூழுமருந் தோரிரண்டு தூயசெல்வ நல்குமின்னூர்
வாழுந்தென் னூரூர் மருந்து.

36 வேதப் பரியுகைத்த மெய்ம்மருந்து வேகவதி
பாதமலர் நாறப் படர்ந்தமருந்—தோத
உலவாப் புகழ்மருந் துத்தமர்க்குத் தீய
மலமாற்று மாரூர் மருந்து.

37 மாயப் பகழிகொண்ட மாமருந்து வஞ்சர்புரம்
தீயக் குறுமுறுவல் செய்மருந்து—தூயகதி
நல்கு மருமருந்து நாடும் பெருஞ்செல்வ
மல்குந்தென் னூரூர் மருந்து.

38 கண்ணுக் கினிய கவின்மருந்து காமர்மலைப்
பெண்ணுக் குயிராம் பெருமருந்து—விண்ணமரர்க்
காவி யுதவுமருந் தால மயின்மருந்து
வாவிசூ ழாரூர் மருந்து.

39 வீதி விடங்கனெனு மெய்ம்மருந்து தூதாகிப்
பாதமலர் நோவப் படர்ந்தமருந்—தோதி
உணர்ந்தா ரறிந்தமருந் தும்பரெலாம் வாழ்த்தி
வணங்குந்தென் னூரூர் மருந்து.

40 தேவி மகிழத் திருநடனஞ் செய்மருந்து
பாவியேன் கண்ணேயைப் பாற்றுமருந்—தோவில்
அருளே திருமேனி யாக்கொண் மருந்து
மருளேயா வாரூர் மருந்து.

41 வானும் புவியும் வணங்குமருந் தன்பர்க்குத்
தேனும்பா லும்போன்ற சீர்மருந்து—கூனும்
குருடுந் தவிர்மருந்து குத்தரமான் கொங்கை
வருடுங்கை யாரூர் மருந்து.

42 வரத்தையடி யார்க்கருளும் வான்மருந் தங்கி
கரத்தைத் தடிமருந்து காவற்—புரத்தில்
தயித்தியரைச் சாடுந் தனிமருந்து வேளூர்
வயித்தியனு மாரூர் மருந்து.

43 எய்யாப் புகழ்மருந் தேத்தித் தொழுமடியார்
னையா தருள்புரியு நன்மருந்து—வெய்யர்
அடைய வரியமருந் தற்றூர்க் கினிய
மடையருளு மாரூர் மருந்து.

44 இரந்தமலை வன்றொண்டர்க் கிட்ட மருந்து
பரந்தமலைப் பாவைமுலைப் பாலைச்—சுரந்தன்பிற்
காழிமழ வுக்கருத்தக் கண்டமருந் தண்டரெலாம்
வாழியவென் னூரூர் மருந்து.

45 வீழி மிழலையிடை மேவியவா கீசருக்கும்
காழியர்கோ னுக்கும்பொற் காசளித்த—பாழிமருந்

தும்ப ரமுதுண்ணஞ் சுண் மருந்து பூஞ்சோலை
வம்புசெறி யாரூர் மருந்து.

46 மன்னுங் கயிலை மலைமருந்து வான்மதியம்
மின்னுஞ் சடைமுடியில் வேய்மருந்து—முன்னும்
தனையிரந்தோர்க் கீயுந் தனிமருந் தன்பர்
மனையிரந்த வாரூர் மருந்து.

47 ஏடாற் றெதிரேற்று மின்மருந்து தன்னையென்று
நாடார் துயர்நாடா நன்மருந்து—பீடார்
தலைவளைத்துத் தாடகைகைத் தார்கொண் மருந்து
மலைவளைத்த வாரூர் மருந்து.

48 ததிவிரவு சோறு தருமருந்தப் பர்க்கு
விதிமுடியைக் கொய்மருந்து மேலா—நதிமுடியிற்
றுங்குமருந் தொண்கலத்திற் றுபதமின் னுர்பிச்சை
வாங்குமருந் தாரூர் மருந்து.

49 தைப்பூச மாடத் தகுமென் றருண்மருந்து
மெய்ப்பூசு நீற்று வியன்மருந்து—கைப்போதில்
மானேந் தியமருந்து மாமதுப்பெய் பூம்பொழில்கள்
வானேந்து மாரூர் மருந்து.

50 ஓடு கவர்ந்திளமை யோரன்பர்க் கீந்தமருந்
தேடுகனல் வேவா தியற்றுமருந்—தோடு
நரிபரியாச் செய்மருந்து நாவலர்பா டுஞ்சீர்
வரிபுனைந்த வாரூர் மருந்து.

51 கண்களிக்குங் காட்சிக் கவின்மருந்து கார்மயப்
பெண்களிக்கும் பாகப் பெருமருந்து—விண்களிக்க
ஆல மயின்றமருந் தம்பொன் னடியடைந்தார்
மாலகற்று மாரூர் மருந்து.

52 இருந்தாடி யின்பெவர்க்கு மீயு மருந்து
பொருந்தாரூர் சுட்ட புகழ்சேர்—மருந்துமலர்த்
தாட்குறி யன்பர் தலைக்கருளித் தன்றலையில்
வாட்குறிகொள் ளாரூர் மருந்து.

53 மண்முனிரு நான்குருவம் வாய்ந்த தனிமருந்து
கண்மூன் றுடைய கவின்மருந்—தொண்மாழை
செங்கலைச் செய்மருந்து தேவர் தொழுமருந்து
மங்கலிலா வாரூர் மருந்து.

54 குன்றுசிலை யாக்கொள் குணமருந்து வேதநெடு
கன்றுகுணி லாக்கொண்டோன் காணாமல்—நின்றுதழல்
ஓங்கலா யோங்கி யொளிருமருந் தம்மைக்கு
மாங்கனிநல் காரூர் மருந்து.

55 பாசு பதவாளி பார்த்தற்கு நல்குமருந்
தேசலிலா னாய ரிசைக்குருகும்—மாசின்மருந்
தின்னலடி யார்க்கிசையா வின்மருந்தின் பேயுருவாய்
மன்னுமருந் தாரூர் மருந்து.

56 புற்றிடங் கொண்ட புகழ்மருந்தென் புன்பவநீர்
வற்றிடச் செய்த வளமருந்து—கற்றாப்
புரந்த கணமருந்து பொன்குளத்திற் கொள்ள
வரந்தந்த வாரூர் மருந்து.

57 நம்பினோ ரைக்கை நழுவவிடா நன்மருந்து
வெம்பினேன் வெங்நோயை வீட்டுமருந்—தெம்பிரான்
என்னப்பூங் கோயி லிருக்குமருந் தோரைந்து
வன்னத்தென் னாரூர் மருந்து.

58 மதிசேர் சடைமருந்து வன்றொண்ட னார்க்குப்
பொதிசோறு தந்த புகழ்சேர்—நிதிமருந்து
நாளைப்போ வார்காண நந்திவிலக் கும்மருந்து
வாளைச்செய் யாரூர் மருந்து.

59 புத்தன் றலையிலிடி வீழப் புரிமருந்து
முத்தனென வேத மொழிமருந்து—சித்தனாய்க்
கல்லானை தின்னக் கரும்பு தருமருந்து
மல்லார்தென் னாரூர் மருந்து.

60 தூசொலிக்குங் கன்மோதுந் தொண்டர்தலை தாங்குமருந்
தேசொலிகே ளாச்செவிகொ ளின்பமருந்—தாசை
உடுத்தமருந் தண்டங்கீண் டோங்கு மருந்து
வடுத்தவிர்ந்த வாரூர் மருந்து.

61 பன்றிபுவி கீண்டறியாப் பாத மலர்மருந்
தொன்றியொன்றா வின்பெற் குதவுமருந்—தென்றும்
அழியாப் புகழ்மருந் தன்பரெலாஞ் சென்னல்
வழிதேற்று மாரூர் மருந்து.

62 அப்பூதி யார்சேயை யண்ணுவிடந் தீர்த்தமருந்
தொப்போ துருநின்ற வூர்ப்பூச—றப்பின்றிச்

செய்தமனக் கோயில்குடி சேர்மருந்து செங்கையிலே
வையமர்சூ லாரூர் மருந்து.

63 இன்பமழ வன்புதல்வி யெய்துநோய் தீர்த்தமருந்
தன்பர் பனியா லடைந்தகொடுந்—துன்பகலப்
பண்ணு மருமருந்து பாவியேன் கண்மாசு
மண்ணுமருந் தாரூர் மருந்து.

64 ஈசனென வோர்மொழிப்பே ரெய்து மருமருந்து
வாசமலர்க் கொன்றை வனைந்தமருந்—தாசில்
குருமருந் தின்பங் கொடுக்குமருந் தொண்சீர்
மருவுமருந் தாரூர் மருந்து.

65 தாயிரங்கா யென்னத் தகுமருந்து சம்பந்தர்க்
காயிரஞ் செம்பொ னருண்மருந்து—நோயோ
டிருந்து வருந்துவர்முன் னெய்தியங்நோய் தீர்க்கு
மருந்துதிரு வாரூர் மருந்து.

66 குவிகைசிரங் கொண்டடியார் கூத்தாட முத்துச்
சிவிகை கவிகைதிருச் சின்னம்—புவிபுகழ
ஆளுடைய பிள்ளையார்க் கன்றருளிச் செய்மருந்தொள்
வாளுடைய வாரூர் மருந்து.

67 விற்கொண் டடித்த விசயற் கருண்மருந்து
கற்கொண்ட சாக்கியனார் கண்டமருந்—தற்கொள்
களமருந்து சோழன் கவினரம் பூண்ட
வளமருந் தாரூர் மருந்து.

68 கமரிற்கை தோற்றிக் கழுத்தரிகை பற்றித்
தமராய்த் தடுத்துவிடேற் சத்தம்—அமர
எழுப்பிவிடைக் காட்சியன்பர்க் கீந்தமருந் தென்றும்
வழுத்தவிர்ந்த வாரூர் மருந்து.

69 கற்புணையாற் சொற்கோன் கடலேறச் செய்மருந்து
மற்புனைபூ தத்தான் மலைபோன்ற—நெற்குவையை
வீடுமறு கெங்குநிறை வித்தமருந் தொண்சிகரி
மாடுபுனை யாரூர் மருந்து.

70 வீயாச் சிரகிரியின் மேயசெட்டிப் பெண்ணுக்கு
மாயாத் தயில மருந்தேந்தித்—தாயாய்வந்
தன்பாய் மருத்துவஞ்செ யான்றமருந் தொண்கடல்சூழ்
மன்பார்சொ லாரூர் மருந்து.

71 கன்றிழந்த வாவிரக்கங் கண்டுதே ரூர்ந்தசேய்க்
கன்றுயிர் தந்தமருந் தாரூரர்க்—கொன்றும்
அருச்சனைபாட் டென்ற வருமருந்து சோலை
மருச்செறிதென் னாரூர் மருந்து.

72 காலன்கன் றுகக் கறக்கும் பசுவாகி
ஏல வுலாய வெழின்மருந்து—சால
இறுகு மனத்தேற் கிரங்குமருந் தந்தோர்
மறுகுதிக ழாரூர் மருந்து.

73 கலத்திற் படைத்த கறிமீண்டு சேயாய்
நலத்தின்வரச் செய்மருந்து நந்தன்—குலத்தி
லுயர்மறையோ னுய்த்தா லூறச்செய் மருந்து
மயர்வகற்று மாரூர் மருந்து.

74 காட்ட மறைக் காட்டிற் கதவுதிறக் கும்மருந்து
மீட்டக் கதவடைக்கு மெய்ம்மருந்து—வேட்ட
அதிபத்தர் பொன்மீன்பெற் றுண்டமருந் தன்பர்
வதியுற்ற வாரூர் மருந்து.

75 பொய்யா மருந்து புனல்சூ டியமருந்து
மெய்யார்க் கொளியாய் மிளிர்மருந்து—நையா
உளத்தார்க் கிருளா யொளிக்குமருந் தின்ப
வளத்தாலா ராரூர் மருந்து.

76 அண்டி வணங்கா வமணர்குரு டாயோடத்
தண்டியடி கட்கிருகண் டந்தமருந்—துண்டிவிரா
நஞ்சமுதா நாவரசர் நன்கருந்தச் செய்மருந்து
மஞ்சுதிக ழாரூர் மருந்து.

77 சொல்லரசை மாவேழஞ் சூழ்ந்துவணங் கிச்சமணர்க்
கொல்லத் திருப்பு குணமருந்து—பல்லவனைச்
சைவக் கரையேற்று தண்மருந்தன் பர்க்குமல
மைவிலக்கு மாரூர் மருந்து.

78 நீற்றறைவா கீசருக்கு நீர்வாவி யாயிளந்தென்
காற்று யமுத கலைமதியாய்த்—தோற்றிச்
சுகஞ்செய்யச் செய்மருந்து தொன்மறையோர் கூடி
மகஞ்செய்யு மாரூர் மருந்து.

79 திருக்கயிலைக் காட்சிதரி சிக்கக்கை கான்மார்
புருக்கலையச் சென்றவப்பர்க் குந்தத்—திருக்காட்சி

ஐயாற் றருளுமருந் தங்களத்தில் வெய்யகடு
வையாற்று மாரூர் மருந்து.

80 தந்தைக் கொலைசிவ தர்மமாச் சேய்ஞலூர்
வந்தபிள்ளை யார்க்கருளு மாமருந்து—சுந்தரர்முன்
ஆற்றினிலிட் டுக்குளத்தி லாய்ந்தெடுத்த பொன்சேயால்
மாற்றுரைத்த வாரூர் மருந்து.

81 சேரர் பெருமானுர் செய்ம்மும் மணிக்கோவை
ஏரமையக் கேட்டமருந் தேயர்கோன்—சீர்வயிற்றுச்
சூலைநம்பி போய்த்தீர்க்கச் சொன்மருந்து செங்கழுநீர்
மாலைபுனை யாரூர் மருந்து.

82 சீர்த்தி மதுரையிற்கை தேய்த்ததிருத் தொண்டரா
மூர்த்திக் கரசளித்த முன்மருந்து—பூர்த்திநமி
நந்திநீ ரால்விளக்கு நன்கெரிக்கச் செய்மருந்து
வந்துவிண்சூ ழாரூர் மருந்து.

83 மாமணத்தின் மானக்கஞ் சாறனுர் மாமகளார்
பூமணக்குங் கூந்தனம் பூணுர்லுக்—காமென்
றரிந்துவளர் வித்த வருமருந்து நாகம்
வரிந்தவரை யாரூர் மருந்து.

84 அன்புருவாங் காரைக்கா லம்மைதிரு வந்தாதி
இன்புறக் கேட்டமருந் தேர்முரு—கன்பூண்டி
யிற்கவர்ந்த பொன்னம்பி யேத்தத் தருமருந்து
மற்கலந்த வாரூர் மருந்து.

85 உதியர்பிரான் வன்றெண்ட ரோடையா றேக
நதிவிலகி மேற்புறத்தி னண்ணி—வதியுதவ
ஆற்றுமருந் தொண்மன்றத் தாடுமருந் தென்கவலை
மாற்றுமருந் தாரூர் மருந்து.

86 தாலி கொடுத்தெதிரே சார்குங் கிலியத்தை
ஏலக் கொடுதூப மிட்டுவந்த—நூலணிந்த
மார்பரையிற் சென்றுண்க மாவென்ற நன்மருந்து
வார்புகழா ராரூர் மருந்து.

87 கழுத்திற் கயிறு கலையனுர் பூண்டன்
றிழுத்தபினேர் நின்றமருந் தியாரும்—வழுத்தக்
குருந்தடியில் வாதவூர்க் கோமானை யாண்ட
மருந்துதிரு வாரூர் மருந்து.

88 ஆரூர்ப் பிறந்தார்க ளாருகமி நந்திநஞ்
சீரூர் கணங்களெனச் செப்புமருந்—தேரூரும்
ஆண்பனே காய்க்க வருளுமருந் தாரருள்சேர்
மாண்பகலா வாரூர் மருந்து.

89 வேனில்வெப் பந்தவிர வெள்ளியமுத் தின்பந்தர்
மேனிழற்ற வேணுபுர வேந்தர்க்குத்—தானளித்த
தண்மருந்து சங்கத் தமிழ்ப்புலவ ரோடாய்ந்த
வண்மருந் தாரூர் மருந்து.

90 நாகைக்கா ரோணத்தி னுவலூர் நம்பிக்கு
வாகைப் புரவிமணி மாலைமுதல்—ஓகையொடு
தந்த மருந்திளைசை சார்மாறர் முன்பசித்து
வந்தமருந் தாரூர் மருந்து.

91 இந்தனந் தாங்கி யெழின்மதுரை மாமறுகில்
வந்து விலைபகர்ந்த மாமருந்து—சந்தமலி
போதந் தருமருந்து பூவணத்திற் சென்றிரத
வாதஞ்செ யாரூர் மருந்து.

92 ஆறு சுவையமுத மன்பின் முகமனொடு
நாறு குழற்கௌரி நன்கூட்ட—வீறுபெற
உண்ட முதியமருந் தொண்காளை யாய்மழவா
மண்டழகா ராரூர் மருந்து.

93 மலையத் துவசன்பொன் மாலையோ டாட
அலையத்தி யோரே முழைத்த—நிலைமருந்
தட்டசித்தி மாத ரறுவர்க் கருண்மருந்து
மட்டவிழ்தா ராரூர் மருந்து.

94 சிங்கத்தைச் சிம்புள்ளாய்ச் செற்றமருந் தண்டருடல்
அங்கத்தைப் பூண்ட வருமருந்து—திங்களொடு
கங்கை யணிமருந்து காமர் மலைபயந்த
மங்கைசே ராரூர் மருந்து.

95 மாண்மை திகழ்மருந்து மாலைத் துழாயணிந்த
ஆமை முதுகோ டணிமருந்து—காமனுயிர்
அன்றிரதி வேண்ட வருண்மருந்து வீதிதொறு
மன்றுதிக ழாரூர் மருந்து.

96 மழுவா லெறிபத்தர் மாய்த்தகைம்மாப் பாகர்
எழுமா றருளுமருந் தின்பின்—வழுவா

வலர்சீர்ச் சிவகாமி யாண்டார்பூங் கூடை
மலர்சேர்த்த வாரூர் மருந்து.

97 சிலந்தி யரசாய்க்கோச் செங்கண்ணு னென்று
நலந்திகழத் தோன்றியன்பு நண்ணி—வலந்திகழ
ஆக்குதளி மேவி யமரு மருமருந்து
மாக்கவினு ராரூர் மருந்து.

98 நலம்பொலியுஞ் சேரர்பிரா னன்குகொளப் பாதச்
சிலம்பொலிகேட் பித்தருளின் செல்வ—வலம்பொலிநன்
னுவலூர்க் கோனண்பு நல்குமருந் தம்பொழில்வாய்
மாவலூ ராரூர் மருந்து.

99 திருமருகற் செட்டிவிடந் தீர்ந்துய்யச் செய்த
அருமருந்து வேணுபுரத் தன்பர்க்—கிருநதிநீத்
தோடங் கரைசேர வுந்துமருந் தம்பொன்செய்
மாடமலி யாரூர் மருந்து.

100 திருமருந்து வேதச் சிரமருந்தா னந்தம்
தருமருந்தென் கண்ணேய் தவிர்க்கும்—அருமருந்து
தேமருந்து நேருந் தியாகேச னென்னும்பேர்
மாமருந் தாரூர் மருந்து.

## பயன்

101 மருந்துமருந் தென்றுகவி மாலை புனைந்தேன்
வருந்துமெளி யேனின்னல் மாற்றி—இருந்தன்
பெருமா புகழ்பாடும் பேராத செல்வம்
தருமாரூர் வாழ்தியாகே சன்.

## சிறப்புப்பாயிரம்

திருந்துபுக ழாரூர்த் தியாகேசன் றன்னை
மருந்துமருந் தென்றினிது வாழ்த்திப்—பொருந்துதுதி
சாற்றுந் தியாகரா சக்கவிஞற் கியாமெல்லாம்
ஆற்றுங்கைம் மாறிலையா மால்.

## குறிப்புரை

**காப்பு:** 1. நார் - அன்பு. நால்வாய் - தொங்குகின்ற வாய். 2. சிரபுரம் - சீகாழி. நாவல் - திருநாவலூர்.

**நூல்:** 1. வேணி - சடை. திருவம் - செல்வம். 3. காலற் காய்ந்து - யமனைக் கோபித்து. 4. காஆர் கரம் - கற்பகத்தைப் போலக் கொடுக்கும்

கையையுடைய. 6. கான்முளை : முருகக் கடவுளை. கால் ஏற்ற - திருவடிகளை ஏற்ற. வன்னி - நெருப்பு. 7. அன்பர் : கண்ணப்பநாயனார். 8. ஆவணம் - அடிமையோலை. கள்ளத்தின் - வஞ்சனையால்; பெரிய. அமர் நீதி. 9. வன்பர் - கொடியர். 10. இருவா - இருத்தாத. 11. கூடல் - மதுரை. 12. வேட்டுவனார் - கண்ணப்பர். 13. கந்தரத்து - கழுத்தில். இந்து - சந்திரன். வார்ந்த - நீண்ட. 14. மாணிக்கா - மார்க்கண்டேயருக்காக. 15. பணி - பாம்பு. நம்ப - விரும்ப. வளி - தென்றல். 16. பாண்டியன் - நின்றசீர் நெடுமாறன். துப்பு - பவளம். மத்தம் - ஊமத்தம் பூ. 17. இல்தோறும் மழவுஆர் - வீடுகள்தோறும் குழந்தைகள் நிறைந்த. 18. விண்மணி - சூரியன். மணிகண்டன் - நீலமணிபோலும் கண்டத்தையுடையவன். 19. நாம் - அச்சம். மாஅடி - மாமரத்தின் அடியில். 20. சாமம் - சாம வேதம். வாமம் - இடப்பாகம்.

21 பாண்டியனாய் - சௌந்தர பாண்டியனாகி. 21. கண்ணாகிய வாளையுடைய மாதர். 24. பாணருக்கா - பாணபத்திரருக்காக. அன்பர்க்குக் குறைவு எய்தப் பொருந்தாத. 26. ஏலம் - மயிர்ச்சாந்து. வன்றி மருப்பு - பன்றிக் கொம்பை. 27. உழுவை - புலி. வழுவை - யானை. இதழி - கொன்றை. 28. வசு - நெருப்பு. 29. ஆத்தி - திருச்செங்காட்டங்குடியிலுள்ள திருவாத்தி. அன்பர் - சுந்தரமூர்த்திநாயனார். மூரல் - சிரிப்பு. 30. மருள் - மயக்கம். 31. சேற்கொடியன் : அரிமர்த்தன பாண்டியன். சூரலடி - பிரம்படி. புற்பறழை - உபமன்யு முனிவரை; பறழ் - குட்டி. நுளையர் - வலைஞர். 32. ஒற்றி மகிழ்அடி - திருவொற்றியூரிலுள்ள மகிழமரத்தின் அடி. 33. தெவ் - பகைவனாகிய ஏமநாதனை. 34. சேந்தன் தவிட்டமுது - சேந்தனாரிட்ட தவிடாகிய அமுதை; "வரையேற விட்டமுதஞ் சேந்தனிட வருந்தனை" (தனிப்.) ஆழி - சக்கராயுதம். 35. ஓரிரண்டு தூய செல்வம்: கல்விச் செல்வம், பொருட் செல்வம். 36. வேகவதி - வைகை நதி; படர்ந்தது கரையமைக்கும் பொருட்டு. 37. மாயப் பகழி - திருமாலாகிய அம்பை. 38. ஆலம் அயில் - விஷத்தை உண்ட. 39. சுந்தரர்க்குத் தூதாகி.

41. கூனுங்குருடும் தவிர் மருந்து: "கூற்றுக் கெவனோ புகறிருவாரூரன் பொன்முடிமேல், ஏற்றுத் தொடையலும் இன்னடைக்காயு மிடுதருமக், கோற்றெரித்து கூனனுங் கூன்போய்க் குருடனுங் கண்பெற்றமை, சாற்றித் திரியும் பழமொழி யாமித் தரணியிலே" (திருத்தொண்டர் திருவந்தாதி, 48.) குத்தரம் : இங்கே இமயமலை. 42. அங்கி - அக்கினி. வேளூர் - வைத்தீசுவரன்கோயில். 43. மடை - உணவு. 44. அமலை - உணவு. வன்றொண்டர் - சுந்தரமூர்த்தி நாயனார். காழிமழவு - திருஞானசம்பந்தர். 45. வம்பு - மணம். அன்பர் - இயற்பகையார். 47. ஆற்று எதிர் - வைகையாற்றின் எதிரே. தாடகை : திருப்பனந்தாளில் பூசித்த ஒரு பெண்ணின் பெயர். 48. அப்பர்க்குத் தரும் மருந்து. விதி - பிரமன். 49. வான் - மேகத்தை. 50. ஓரன்பர் - திருநீலகண்ட நாயனார். வரி - பாட்டு. 51. மால் - மயக்கம். 52. இருந்தாடி : "விண்ணோர், விருந்தாடு மாரூராமென்மலர்த்தா டேக்கா, திருந்தாடு கின்றவா வென்" (திருவாரூர் நான்மணி

மாலை, 18.) தாட்குறி - திருவடிச் சுவடு. அன்பர் - திருநாவுக்கரசர். வாட்குறி கொண்டது இரத்தினகிரியில். 53. இருநான்கு உருவம் - அஷ்டமூர்த்தம். மாழை - பொன்னுக. 54. குணில் - குறுந்தடி. அம்மை - காரைக்காலம்மையார்.

56. பவநீர் - பிறப்பாகிய கடல். கற்றுப் புரந்த கணை - கன்றுகளையுடைய பசுக்களைக் காப்பாற்றிய திருமாலாகிய அம்பு. பொன் : மணிமுத்தாற்றில் சுந்தரரிட்ட பொன். 57. பூங்கோயில் : திருவாரூரிலுள்ள ஆலயத்தின் பெயர். ஐந்து வன்னம் - ஸ்ரீ பஞ்சாட்சரம். 58. வாளைச்செய் - வாளைமீன்களையுடைய வயல். 60. தூசு - ஆடை. தொண்டர் - திருக்குறிப்புத்தொண்ட நாயனுர். ஆசை - திசைகளை. 61. செல் நல்வழி - செல்லும் நல்ல வழியை. 62. பூசல் - பூசலார் நாயனுர். சூல் - சூலம்; கடைக்குறை. 63. நோய் : முயலகன். பனியால் துன்பம் அடைந்தது கொடிமாடச் செங்குன்றூரில். மண்ணும் - கழுவும். 66. ஒள்வாள் - வீர கண்டயம். 67. சோழன் ஆரத்தைப்பூண்டது திருவானைக்காவில். 68. கமரில் - வெடிப்பில். அன்பர் : அரிவாட்டாய நாயனுர். 69. சொற்கோன் - நாவுக்கரசர். நெற்குவை : குண்டையூர்கிழார் சுந்தரர்க்கு அளித்தது. சிகரி - கோபுரத்தை. மாடு - நான்கு பக்கத்தே.

71. சேய்க்கு - வீதிவிடங்கனுக்கு. ஆரூரர்க்கு - சுந்தரர்க்கு. அருச்சனை பாட்டு : "அற்சனை பாட்டே யாகு மாதலான் மண்மே னம்மைச், சொற்றமிழ் பாடு கென்றூர் தூமறை பாடும் வாயார்" (பெரிய. தடுத்தாட்கொண்ட. 70.) மரு - மணம். 72. தேர்மறுகு - தேரோடும் வீதி. 74. காட்ட - தம்மைக் காண்பித்தற்கு. அதிபத்தர் - அதிபத்த நாயனுர். 76. அண்டி - அடைந்து. உண்டி விராம் - உணவோடு கலந்த. 78. இப்பாடல், "மாசில் வீணையும்" (தே. திருநா.) என்பதை ஒற்றிவந்தது. 79. கடுவை - விஷத்தை. 80. சேய் ஞலூர் வந்த பிள்ளையார் - சண்டேச நாயனுர். சேயால் - விநாயகரால்; மாற்றுரைத்த விநாயகரென்பது தலவிநாயகர் திருநாமம். 81. சூலை - வயிற்று வலியை. நம்பி - சுந்தரர். செங்கழுநீர்மாலை தியாகேசர்க்குரியது. 82. வந்து - காற்று. 83. நாகம் வரிந்த அரை - பாம்பைக் கச்சாகக் கட்டிய இடை.

85. உதியர்பிரான் - சேரமான்பெருமாள் நாயனுர். வதி - வழி. நூலணிந்த மார்பர் : கலய நாயனுர். மா : அசை. 88. ஆண்பனை காய்க்க அருளியது திருவோத்தூரில். 90. இளைசை சார்மாறர் - இளையான்குடிமாற நாயனுர். 91. இந்தனம் - விறகு. 91. இரதவாதம் - ரசவாதம். 92. இதில் அமைந்த வரலாறு விருத்தகுமார பாலரான திருவிளையாடல். மண்டு அழகு - மிக்க அழகு. 93. பொன் மாலை - காஞ்சனமாலை. அத்தி - கடல். 94. அங்கம் - எலும்பு. 95. மாமை - பேரழகு. முதுகு ஓடு - முதுகின் ஓட்டினை. 96. கைம்மாப்பாகர் - யானையும் பாகரும். 97. தளி - கோயில். 98. சேரர்பிரான் - சேரமான் பெருமாள். மாஅல் ஊர் - பெரிய இருள் பரவிய. 99. நீத்து - வெள்ளத்தில்.

---

# ஸ்ரீ தியாகேசர் தாலாட்டு

---

1 சீராரு மாரூர்த் தியாகர்தம்மைத் தாலாட்ட
வாராழி மூன்றுமத வாரணமே முன்னடவாய்.

2 என்னிரண்டு கண்ணிடமா மெம்மானைத் தாலாட்டப்
பன்னிரண்டு கண்படைத்தோன் பாரம்பரப்புதுமை.

3 அரவணையிற் கண்டுயிலு மச்சுதனார் மெச்சிப்
பரவநெடுங் கற்பமெலாம் பாற்கடலில் வாழ்ந்தாரோ.

4 ஆழிநெடு மாலருளா லாதியய னாருலகில்
வாழி நெடுங்கால மாபூசை கொண்டவரோ.

5 இந்திரனுக் கந்தணனு மீந்தருள விண்ணுலகில்
மந்திரவஸ் தாக வளமா யுறைந்தாரோ.

6 ஈரேழு லோக மிசைந்தமுசு குந்தனுக்கே
பாரோர் தொழுமகவைப் பாலிக்க வந்தாரோ.

7 உத்தசிவத் தானநிறை வொவ்வா தனக்களித்தே
மத்தையணி யாரூரில் வாழ்த்தும் பெருமாளோ.

8 ஊசிமுனைத் தவம்புரிவா னோரா யிரங்கண்ணுடை
வாசவனா ரந்தரத்தே வாழ்த்தும் பராபரரோ.

9 எண்ணிறந்த சாம்பசிவ மென்னுந் தனிப்பொருளோ
பண்ணிறைந்த வேதாந்தப் பஞ்சாட் சரவடிவோ.

10 ஏலக் கருங்குழலா ரெல்லாரும் போற்றிசெய்யப்
பாலொத்த மென்மொழியாள் பாகத் துறைந்தாரோ.

11 ஐயமெடுத் துண்டுமடிக் காயிரம்பொன் னாரூரில்
உய்யவரு ளுத்தரத்தே ரூரும் பெருமாளோ.

12 ஒன்னார் மடிய உறைவா ளெடுத்தாரோ
தென்னாரூர் வாழுந் தியாகப் பெருமாளோ.

13 ஓராவின் கன்றுக்கா வுயர்மனுவின் றன்மகவைப்
பாராமற் கொன்றுபழி வாங்கும் பராபரரோ.

14 ஔவிய மில்லாம லானசிறுத் தொண்டர்மன்னன்
செவ்வியபிள் ளைக்கறிக்குச் சிந்தை மகிழ்ந்தாரோ.

15 கம்பக் கரிமுகவன் கந்தனுமை யாளுடனே
அம்பர்ச்சோ மாசிமன்ன னாதரிக்கச் சென்றாரோ.

16 காதல் பரவுமிசைக் கங்குலிலே சுந்தரனார்
வாதுக்குத் தூதுசென்று வந்தவரைச் சொன்னாரோ.

17 கிஞ்சித் திமையுங் கெலிபிடியா மறகடலில்
நஞ்சுதனை வாரியுண்ட நாயகரைச் சொன்னாரோ.

18 கீதம் பரவுமிசைக் கின்னரர் கிம்புருடர்
நாதந் தனக்கிரங்கு நாயகரைச் சொன்னாரோ.

19 குற்றமொரு சற்றுமிலாக் கோவேந்தன் வந்துதொழப்
புற்றி னிடங்கொண்ட புனிதர்தமைச் சொன்னாரோ.

29 கூறு மாதவஞ்செய் கொண்டல்வண்ணன் சென்னியுடன்
வீறுகம லாலயத்தே மெய்ப்பொருளைச் சொன்னாரோ.

21 கெங்கை தழுவிக்..................சடையானை
அங்கைமழு மானேந்து மையர்தமைச் சொன்னாரோ.

22 கேள்விக் குரியவரைக் கீர்த்திமனு வேந்தர்தொழ
வாழ்விக்க வந்தவொரு வள்ளல்தமைச் சொன்னாரோ.

23 கைவணங்கு மேழுவிடங் கைத்தொழுவார் வந்துமுதல்
மெய்வணங்கு வீதி விடங்கப் பெருமாளோ.

24 கொங்கை தழுவிக் குளிர்கோபு ரத்தானை
திங்க ளணிகொண்ட தியாகர்தமைச் சொன்னாரோ.

25 கோகனக மாதுதொழக் கொண்டல்வண்ணன் சென்னியுடன்
ஆகம் புரமழித்த வையர்தமைச் சொன்னாரோ.

26 கௌரி புகழ்த்திருமால் கஞ்சமுனி நின்றுதொழப்
பவுரிசெய் வேதாந்தப் பரஞ்சுடரே கண்வளரீர்.

27 முப்பத்து முக்கோடி தேவர் புடைசூழத்
தெப்பத்தின் மீதில்வருஞ் செல்வரே கண்வளரீர்.

28 அண்டரு மண்ட ரரசும்புவி யுந்தழைக்கத்
தண்டிலசைந் தாடுகின்ற சங்கரரே கண்வளரீர்.

29 சுந்தரன் சம்பந்தன் துதிக்கரசன் சொற்கேட்டுச்
சிந்தை மகிழ்ந்து திருக்கண் வளர்ந்தருளீர்.

# திருவாரூர்த்தலச் செய்திகள்

( எண் : குறவஞ்சிச் செய்யுளின் எண் )

தியாகேசர் குறவஞ்சியில் திருவாரூர்த்தலத்தைப்பற்றிய செய்திகளும் ஸ்ரீ தியாகேசருடைய அருமை பெருமைகளும் அமைத்துப் பாராட்டப்பெற்றுள்ளன. அவை வருமாறு :—

இத்தலத்துக்குரிய விநாயகர் இருவர் : (1) வாதாவி விநாயகர், 1; (2) விட்டவாசற் கணபதி : 2, 25.

தியாகேசருக்குரிய மலர்கள் : (1) செங்கழுநீர் மாலை ; 2, 7, 20, 23, 33, 40, 52, 54. (2) செவ்வந்தித்தோடு : 7, 20, 52.

அவருடைய தாள் வீரகண்டயமெனப்படும் ; 21.

தியாகேசர் விடங்கமூர்த்தியென்றும் வீதியிலும் எழுந்தருளுதல்பற்றி வீதிவிடங்கரென்றும், சப்தவிடங்க மூர்த்திகளுள் முதன்மையானவரென்றும் கூறப்படுவர் ; 2, 7, 30.

தியாகவினோதர் : 23, 31, 35.

தியாகேசர் பரவையாரின் ஊடலைத் தீர்க்கும்பொருட்டுச் சுந்தரருக்காகத் தூது சென்றது. 7, 20, 35, 41, 52.

நிர்த்தத்தியாகர் : 20, 36.

முன்னிலும் மும்மடங்கு பின்னழகர் : 20.

திருவாரூரில் திருவந்திக்காப்பு விசேஷமுடையது : 20, 64.

சிம்மாசனாதிபதியென்று தியாகேசர் சிறப்பிக்கப்பெறுவர் : 2, 7, 20, 25, 43, 52, 63.

திருமால், இந்திரன், முசுகுந்தன் என்னும் மூவராலும் வழிபடப் பெற்றவர் : 4, 7, 9, 20, 25.

தேவரகண்டப் பெருமாள் : 6, 20.

தென்றல் இத்தலத்திற் சிறப்புடையது : "தென்றல் வாசலழகர்" (7) "தென்றற்காற்றில் வீற்றிருக்குங் கமலைத்தியாகர்" (20) "தென்றல் வாசலிது" (25)

கம்பிக்காதழகர் : 7, 20, 25, 35.

அடிக்காயிரம் பொன் சொரிபவர் : 20.

ஆடரவக் கிண்கிணிக்காலழகர் : 20, 41.

பங்குனி உத்தரம் இத்தலத்திற் சிறப்புடையது : 35, 51.

திருவீதிகள் : (1) செந்தாமரை நாறிய திருவீதி : 19 ; அடிமுடி நேடிய திருவீதி : 20.

தீர்த்தங்கள் : (1) தேவதீர்த்தம் : 47 ; கமலாலயம் : 40.

திருவாரூரின் சிறப்புக்கள் :—"நிறைந்த செந்தமிழ்சேராரூர்ப்பதி" (8) ; "செஞ்சொன்மேவு தென்கமலை" (17) ; "மூவர் தமிழ்விளங்க நிற்கும் வாசல்" (25) ; "முத்தமிழுக்கரசாகிய சுந்தரர்புகழாரூர்" (36) ; "தேரணியு மதிலணியுஞ் சிறந்த திருவாரூர்" (39) ; "கவிசெலா நகரமென்றுங் கந்தமாபுரியிதென்றும், தலமெலாம் புகழுமாரூர்" (42) ; "மூவர் தமிழ்க் குகந்தவன்" (52)

தியாகேசர் திருமாலின் மார்பிலும், பின்பு இந்திரன் உலகத்திலும் எழுந்தருளியிருந்து அதன்பின் முசுகுந்தனால் பூமிக்குக் கொணரப்பெற்றனர் : 20 : 31-6.

மனுநீதிச் சோழனுடைய மெய்யன்பை விளக்கத் தியாகேசர் பசுவாகவும், யமன் கன்றாகவும் வந்த ஓர் அரிய செய்தி இந்நூலிற் காணப்படுகின்றது : 20 : 37—40.

இத்தலத்தில் பராசத்தி யோகாசனத்திலுள்ளாள் : 20 : 6—9.

வன்மீகத் தியாகர் : 3, 12, 14, 20, 52.